221
11/69

# திருவண்ணாமலை வரலாறு

சி. ஈ. எஸ். பெருமாள், Journalist,
தென்னாட்டுக் கோயில் வரலாற்று ஆசிரியர்.

வெளியீட்டகம்:

ஸ்ரீ புவனேஸ்வரி புத்தகாலயம்,

74, புதுப்பாளையத் தெரு, பிள்ளையார்பாளையம்,

காஞ்சிபுரம்-2.

முதற்பதிப்பு 1969.

உரிமை ஆசிரியருக்கே

[உரிமை பதிவு]

112842

செங்குந்தமித்திரன் அச்சகம், சென்னை-1.

# உள்ளுறை

I. அருளுரை ... ... ...

1. மூர்த்திச் சிறப்பியல் .... ... 1...3

ஆராத இன்பம் அருளும் மலை - நடுநாட்டின் நாயகம் - அம்பாளும் அட்டலட்சுகளும் - திருப்பெயர்கள்.

2. தலச் சிறப்பியல் ... ... 4...7

இலிங்கோற்பவ வரலாறு - பிரம விஷ்ணுக்கள்போர் - உண்மை வென்றது - கார்த்திகை தீபமும் பயனும் - எண்முகமாய் எழுந்த மலை - மலையின் மகிமை - மலை வலத்தின் மாண்பு - அடையும் பயன்கள்.

3. தீர்த்தச் சிறப்பியல் ... ... 8...9

கிழக்கில் - தென் கிழக்கில் - தெற்கில் - நிருதி மூலையில் - மேற்கில் - வாயுதிக்கில் - வடக்கில் - ஈசான்யத்தில் - பிறவிப் பிணிதீர.

4. புராணச் சிறப்பியல் ... ... 10...13

அம்பாள் திருவவதாரம் - அகோர வீரபத்திரர் உதயம் - பார்வதி திருமணம் - திருக்கண் புதைத்தமை - காஞ்சியில் காமாட்சி அறம் வளர்த்தமை - திருவண்ணாமலையில் இடப்பாகம் பெற்றமை.

5. தெய்விகச் சிறப்பியல் ... ... 14...19

மகா விஷ்ணு - பிரமன்-சூரியன் - சந்திரன் - அட்டவசுக்கள் - வச்சிராங்கத பாண்டியன் - வல்லாள மகாராஜன் - திருவிளையாடர் காணீர் - அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை - பிரதத்தன் - புளகாதிபன்.

6. அற்புதச் சிறப்பியல் ... ... 20...45

அருணகிரிநாதர் - காலம் - சமய - நூல்கள் - கோபுரத்திளையனார் காட்சி - வில்லியாருடன் வாது - கம்பத்து இளையனார் காட்சி - கிளி உருவக் காட்சி - விருபாட்சி தேவர் - குகை நமசிவாயர் - அருணகிரி அந்தாதி - திருவருணைத் தனி வெண்பா - குரு நமசிவாயர் - அண்ணாமலை வெண்பா - ஈசானிய ஞான தேசிகர் - சேஷாத்திரி சுவாமிகள் - இளமையில் ஞான உதயம் -

ஸ்ரீ ரமண மகரிஷிகள் - சீடர்கள் - ஸ்ரீரமணர் அருளியவை - திருமதி தலையார்கான் திருப்பணி - ஸ்ரீ ரமண ஆசிரமம் - ஜடினி சண்முக யோகினி - பாணி பத்திரர் - பத்திராசல சுவாமிகள் - ஈசுவர சுவாமிகள்.

7. சரித்திரச் சிறப்பியல் ... ... 46...53

திருவண்ணாமலை விளக்கம் - வரலாற்றுச் சிறப்பு - அரசர்கள் ஆட்சி - திருவிளக்கு எரிக்க தானம் - பொன் வேய்ந்த தானம் - கிராம தேவதானம் - மெய்க் கீர்த்திகளும் திருப்பணிகளும் - ஆராய்ச்சிக்குரிய அரிய கல்வெட்டுகள் - சிற்ப நுட்பங்கள் - நகரத்தார் திருப்பணி - திருப்பணந்தாள் தருமங்கள் - பிற திருப்பணிகள்.

8. சமயச் சிறப்பியல் ... ... 54...64

திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை - திருநாவுக்கரசு சுவாமிகள் - 4, 5, 6 திருமுறை - சுந்தரமூர்த்தி சுவாமிகள் - மாணிக்க வாசக சுவாமிகள் - திருவெம்பாவை - திருவம்மானை - இரட்டையர் பாடல் - அருணாசலப் புராணத்துட் சில மணமலர்கள்.

9. தீபச் சிறப்பியல் .... ... 65...70

10. இலக்கியச் சிறப்பியல் ... ... 71...79

திருஞான சம்பந்தர் - சங்க கால ஔவையார்-நக்கீரர் பெருமான் - பாவாணர் பெருங்கடுங்கோ - முன்றுரை அரையனார் - பொய்கையார் - திருத்தக்க தேவர் - முத்தொள்ளாயிரத்தார் - தொல்காப்பியனார் - வேத இருக்குகள்.

11. பிற கோயிற் சிறப்பியல் ... ... 80...96

ஸ்ரீ துர்க்காம்பாள் கோயில் - மாயை வீழ்ந்தது - பவளக் குன்று - ஸ்ரீ ஆதி அருணாசலேசுவரர் கோயில் - உழுமண்ணுப் பிள்ளையார் - மாணிக்க வாசகர் ஆலயம் - சாத்தனூர் அணை - சாத்தனூர் பூங்கா - ஏ. கே படவேடு - வேலூர் கோட்டை - விரிஞ்சிபுரம் - நினைவுக் குறிப்புகள் - புகைப்படங்கள் - உய்ந்தேன் நானே - மங்கல வாழ்த்து.

★



உ

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

## ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்,

### காஞ்சீபுரம்.

முகாம்: ஏலூரு
மேற்கு கோதாவரி ஜில்லா)

தேதி: 31-12-1968

பஞ்ச பூத ஸ்தலங்களுள் தேஜஸ் ஸ்தலமாக விளங்கும் திருவண்ணாமலையைப் பற்றி தென்னாட்டுக் கோயில் வாலரற்று ஆசிரியர் ஸ்ரீ சி. ஈ. எஸ். பெருமாள் எழுதியிருக்கிற 'திருவண்ணாமலை' வரலாற்றுச் சித்திரம் என்னும் நூல், இத்தலத்தில் விளங்கும் ஸ்ரீ அருணாசலேச்வரப் பெருமானின் பெருமை, மலையின் மஹிமை, தீர்த்தங்களின் மாண்பு, புராண-சரித்திர வரலாற்றுக்கள், இத்தலத்தில் பேறு பெற்ற அருணகிரியார் முதலிய பக்தர்களின் நல்வாழ்க்கைச் சுருக்கம் முதலிய விசேஷங்களை எளிய தமிழ் நடையில் விளக்குகிறது.

ஆஸ்திகர்கள் இந்நூலின் துணைகொண்டு திருவண்ணாமலையின் பெருமையை அறிந்து இங்கு விளங்கும் பெருமானை வழிபட்டு எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.

# நன்றியுரை

ஆதிபரஞ்சோதியாம் அண்ணாமலையார் அருளை முன் வைத்து, திருநிறைந்த திருவண்ணாமலை வரலாற்றை நூல் வடிவில் எழுதியிருக்கிறேன். எழுத ஊக்கமளித்த அறிஞர் பலருக்கும் என் நன்றி.

அருளரசர் காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஆசர்ய சுவாமிகள், ஸ்ரீ புதுப் பெரியவர்கள் என்பால் கருணை கொண்டு அருளுரை வழங்கிய பெற்றிமையை நல்வாய்ப்பாகவே கருதுகிறேன்.

பல்லாற்றானும் உதவிய நண்பர் நடராஜா டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி திரு. கந்தசாமி முதலியார், அழகாக அச்சிட்ட அச்சக மேலாளர் நண்பர் எம் சண்முகம் மற்றும் ஊக்குவித்த நண்பர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றி.

**சி. ஈ. எஸ். பெருமாள்,**
தென்னாட்டுக்கோயில் வரலாற்று ஆசிரியர்



**அருட் பிழம்பாய் ஒளிரும் அண்ணாமலை அண்ணல்.**



ஸ்ரீ உண்ணாமுலை உமையாள்.

உ

# திருவண்ணாமலை

(வரலாற்றுச் சித்திரம்)

## மூர்த்திச் சிறப்பியல்

உலகின் கண்ணேயுள்ள உன்னதமான சிவத்தலங்களுள் புனிதமும் புகழும் பெற்று விளங்குவது திருவண்ணாமலைத் திருத்தலம் ஆகும். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய்-அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்-ஆதிநெடுமால் அயன்காணா பரஞ்சோதிச் செழுஞ்சுடராய்-நினைத்தவுடனே முத்திச் செல்வத்தையே முந்தித் தருவதாய்-ஸ்ரீ உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவனாய்-எஞ்ஞான்றும் வேதம் முழங்க எம்பெருமான் எழுந்தருளிய உன்னதத் திருத்தலமாகும். கௌரி நகரம், தேசு நகரம், அருணாசலம், சிவலோக நகரம், வாயு நகரம், முத்தி நகரம், ஞான நகரம், தலேச்சுரம், சுத்த நகரம், தென்கயிலாயம், சோணகிரி என்று புராணங்கள் போற்றும் பெருமைமிகு இத்தலத்தில், தேவர்களும் தவ ஞானிகளும் முத்திபெற்று இருக்கிறார்கள். ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலமாகவும், பஞ்ச பூதத் தலங்களுள் அக்கினித் தலமாகவும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையோடு பொருந்தி ஞானத் தபோதனர்களை வா வா என்று அழைக்கும் வளம்சான்ற புனிதப் பெருந்தலமாகவும் திருவண்ணாமலைத் தலம் திகழ்வதை யாரே மறுக்க வல்லார்; யாரே மறக்கற் பாலார்!

## ஆராத இன்பம் அருளும் மலை

திருவண்ணாமலைத் திருப்பதியின் தெற்கில் இலிங்க உருவமாகிய அருள்மலை பிரகாசித்துக்கொண்டு விளக்கம் அளிக்கிறது. இதுவே சோணாசலம், சோணகிரி, சோணாத்திரி, அருணாசலம், அருணகிரி, அருணாத்திரி, அனற்கிரி, திருவருணை என்றெல்லாம் சிறப்பிக்கப் பெறுவது ஆகும். இதற்குக் கீழ்ப்பால் அர்க்க மலையில் தேவேந்திரனும், தெற்கிலுள்ள தெய்வ மலையில் இயமனும், மேற்கிலுள்ள தண்டமலையில் குபேரனும், மற்ற திசைகளில் திக்குப் பாலகர்களும், சுற்றி நிற்கும் மலைகளில் தேவ தேவர்களும் வாழ்ந்து வந்து சுவாமியை வழிபட்டு வருகிறார்கள் என்று நூல்கள் கூறும்.

## நடுநாட்டின் நாயகம்

தொண்டை நாட்டுக் கோட்டங்களுள் ஒன்றாகிய செங்குன்றக் கோட்டத்து அண்ணாநாட்டு அண்ணாத்தூர் என்று கல்வெட்டுக்களால் போற்றப்பெறும் பெற்றிமையுடைய இத்திருப்பதி, நடுநாட்டின் நாயகமாய், மகத நாட்டு மணி (பூரக)த் தலமாய், வட ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் காட்பாடி இருப்புப் பாதையில் விழுப்புரத்திலிருந்து 42 மைலிலும், காட்பாடியிலிருந்து 52 மைலிலும் அமைந்துள்ளது.

## அம்பாளும் அட்டலட்சுமிகளும்

இங்கே எழுந்தருளிய நாதர் ஸ்ரீ அருணாசலேசுவரர், அம்பாள் ஸ்ரீ அபீதகுசாம்பாள் என்னும் உண்ணாமுலையார். அம்பாளுக்குத் தனிச் சந்நிதி உண்டு.

**தலவிருட்சம்:** மகிழ மரம், கிளைத்துப் படர்ந்து பூத்துக் குலுங்குகிறது.



அம்பாள் சந்நிதியின் முன்புள்ள மகா மண்டபத்துள் அழகொழுகும் அட்டலட்சுமிகள், உருத்திர துர்க்கை, மகாசத்தி, மகாசரஸ்வதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணாதரர், வீரபத்திரர் ஆகியோர் கலை சொட்டும் கவின் கோலத்துடன் காட்சி தரவும், பராசக்தி, பரிவார மூர்த்திகள், சண்ட சத்திகள் சூழவும் ஆகிய திவ்வியத் திருக்கோலத்துடன் ஒளிரும் ஸ்ரீ அம்பாளின் அழகை அனுபவிக்கும் ஆனந்தம் பெரும் பேரானந்தமே யாகும்.

## திருப்பெயர்கள்

திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆழ்வார், திருவண்ணாமலை உடையார், அண்ணாநாட்டு உடையார் என்று சுவாமியையும், உண்ணாமலை நாச்சியார், திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார் என்று அம்பாளையும் கல்வெட்டுகள் போற்றிப் புகழ் பாடுகின்றன. அம்மட்டோ! அபிநயபுசங்கராயர், பரிமள வசந்தராயர், புழுகணி இறைவர் என்று சுவாமியை இலக்கியங்கள் ஏத்துகின்றன.

# தலச் சிறப்பியல்

## இலிங்கோற்பவ வரலாறு

எல்லா உலகும் உயிரினங்களும் அழியும் காலமே மாசங்கார காலம் ஆகும். அக்காலத்தில் ஏகமாய் நின்று நடமாடிய பரமசிவன். மீண்டும் உலகு உண்டாக வேண்டும் என்று திருவுளம் பற்றுகிறார். பஞ்ச கிருத்திய கருத்தாக்களின் உதயம் நிகழுகிறது.

## பிரம விஷ்ணுக்கள் போர்

பிரமதேவன், தன்னாலேயே இவ்வுலம் உண்டானதாக அகந்தை மிகக் கொண்டு போரிடச் செல்கிறான். விஷ்ணுவும் பொறுமையை இழக்க நேரிடுகிறது. அண்ட கடாகங்கள் அனைத்தும் வெடிக்கும்படியான பெரும்போர் நடக்கிறது. இதனால் பயமும் பீதியும் கொண்ட தேவதேவர்கள், பரமசிவனை நினைந்துருகித் தொழுது முறையிடுகிறார்கள். அவ்வளவில் சுவாமி அவர்களுக்கு அருள் பாலித்து, பிரம விஷ்ணுக்களின் ஆணவத்தை அழித்திட—உலகை உய்வித்திட-அவ்விருவருக்கும் மத்தியில் அக்கினி மலையாய் எழுந்தருளுகிறார்.

## உண்மை வென்றது

மலையைக் கண்டவர்கள் முதலில் மருண்டு, பின் அம்மலையின் அடியையோ முடியையோ அறிபவர்களே பெரியவர்கள் என்று தங்களுக்குள் சபதம் செய்து கொள்கிறார்கள். விஷ்ணுவோ, வராக உருவம் எடுத்து அடியைக் காணமாட்டாமல் அயர்ந்து திரும்பி விடுகிறார். பிரமனோ



அதன் முடியைக் கண்டறிவதாகக் கூறி அன்னப் பட்சியாய்ப் பறந்து சென்றவர், தோல்வியுடன் திரும்பி வருகிறார். மலையின் முடியைக் கண்டதாக பிரமன் விஷ்ணுவிடம் பொய்ப் புகன்றபோது—சுவாமியின் முடியினின்று தவறி விழுந்ததொரு தாழம்பூவும் 'ஆம்' என்று பொய்ச் சாட்சி கூறியபோது-உலகம் நடுங்க அக்கினி மலை வெடிக்கிறது. பரமசிவன் காட்சி தந்து, பொய் புகன்றமையால் பிரமனுக்கு பூவுலகில் கோயிலும் பூசையும் இல்லாமல் போகுமாறும், அதற்கு உடந்தையாக இருந்து பொய் சாட்சி கூறிய தாழம் பூவை 'தீண்டோம்'-என்று வெறுத்து ஒதுங்கிப் போகுமாறும் சபிக்கிறார். உண்மையை உளமார ஒப்புக்கொண்ட விஷ்ணு, வேண்டிய வரங்களைப் பெறுகிறார்.

## கார்த்திகை தீபமும் பயனும்

பின் அகந்தை நீங்கிய பிரமன், தன் நிலை உணர்ந்து தன் பிழையைப் பொறுத்தருள வேண்டுகிறான். கருணைக்கு அருணகிரியாகிய எம்பெருமான், அருள்பாலித்து மீண்டும் அவனைச் சிருட்டித் தொழிலுக்குக் கருத்தா ஆக்குகிறார். பிறகு தேவதேவர்கள் வேண்டிய வண்ணம் இந்த அக்கினி மலையின் பிரகாசம் மறைந்து, மற்ற மலைகளைப் போன்று சிறிய மலையாய்க் காட்சியளிக்கிறது, 'இன்றும் இம்மலையின் உச்சியில் கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் ஒரு பிரகாசம் காட்டுவோம். இதை தரிசித்தவர்கள் எவ்வித இடையூறும் நீங்கப்பெற்று இனிது வாழ்வர். வறுமை, பசிப்பிணி அனைத்தும் அவர்களை அண்டாது. இதைத் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தோரு தலைமுறைக்கும் முக்தி வரம் கொடுத்து வருவோம்!'-என்று சுவாமி திருவாய் மலர்ந்தருள்கிறார். பக்தர்களின் விருப்பின்படி மலையின்

கீழ் ஓர் இலிங்கத்திருவுருவமாய் எழுந்தருளிய நிலையில் 'ஸ்ரீ அருணாசலேசுவரர்' என்று போற்றப் பெறுகிறார். இவ்வரலாறே இலிங்கோற்பவத்தின் தோற்றமாகும்.

### எண்முகமாய் எழுந்த மலை

ஒரு சமயம் பிரமதேவனால் சபிக்கப்பட்ட சாபம் நீங்கும் பொருட்டு அட்ட வசுக்கள் கங்கைக் கரையிலும், திருவண்ணாமலையைச் சூழ்ந்த எட்டுத் திக்குகளிலும் இருந்து தவம் நோற்று, தத்தம் பதவியையும் சிவபதத்தையும் அடைகிறார்கள். அந்த எட்டு வசுக்களுக்குப் பரமசிவன் எட்டு முகமாயிருந்து காட்சி தந்து அருளிய ஐதீகத்தோடு இன்று திருவண்ணாமலை எண்முக அமைப்போடு விளங்குவதை அறியலாம் அன்றோ!

### மலையின் மகிமை

இவ்வருணாசலம் கிருதயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் காட்சியளிப்பதாக ஐதிகம். மலைகளை நான்கு வகையாகப் பிரித்துப் பேசும் 'ஜியாலஜி' என்னும் நிலநூல், இம்மலையை 'நெருப்பினால் வந்த குன்று' (Igneous Rock) என்று குறிப்பிடுகிறது.

இம்மலையின் அட்ட திக்குகளிலும் திக்குப் பாலகர்கள் பூசித்த இலிங்கமும், கிழக்கில் பார்வதி தேவி பூசித்த இலிங்கமும், தெற்கில் வச்சிராங்கத பாண்டியன் பூசித்த புழுகணி இறைவர் என்னும் இலிங்கமும், மேற்கில் பிரமனால் பூசிக்கப்பட்ட அணி அண்ணாமலை என்னும் இலிங்கமும், சூரியனால் பூசிக்கப்பட்ட இலிங்கமும் மற்றும் மகிமை வாய்ந்த இலிங்கங்கள் பலவும் சூழ்ந்து விளங்குகின்றன.



### மலைவலத்தின் மாண்பு

இம்மகிமை மிகு மலையை வலம் வரும் பக்தர்கள், அதிகாலையில் புனித தீர்த்தத்தில் புனித நீராடி பரிசுத்த ஆடை உடுத்தி, விபூதி தரித்து தானம் ஈந்து, பிறதானம் பெறாமல் வலம்வரச் செல்லவேண்டும். மேற் போர்வையின்றியும், குடை பிடித்துக் கொள்ளாமலும், தாம்பூலம் தரிக்காமலும், பாதரட்சை அணியாமலும், வாகனங்களில் ஏறாமலும் செல்ல வேண்டும். காலால் நடந்து, கையால் சிரசின் மீது கூப்பி, ஸ்ரீ அருணாசலேசுவரரையே நெஞ்சில் நினைந்துருகி மெல்ல நடந்து மலைவலம் வரவேண்டும். அவ்வமயம் அட்டதிக்கிலுள்ள சுவாமிகளை வணங்கி, சித்தர்களையும் தேவர்களையும் நினைந்து ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயத்தில் பிரகாசமாய் ஒளிரும் பரமசிவத்தைத் தரிசித்து மீள வேண்டும். பிறகே பாலோ பழமோ அன்றி பரிசுத்த அன்னமோ உட்கொள்ள வேண்டும்.

### அடையும் பயன்கள்

இதனால் ஆதிவாரத்தில் சிவபதமும், சோமவாரத்தில் தேவேந்திர வாழ்வும், மங்கள வாரத்தில் பிறவிப் பிணி நீங்கிய பெரு வாழ்வும், புதவாரத்தில் தேவராகும் தகுதியும், குருவாரத்தில் முனிவர்க்கும் மேலான பதவியும், சுக்கிரவாரத்தில் விஷ்ணு பதமும், சனி வாரத்தில் நவக்கிரக பலனும், மற்றும் சிவராத்திரி, வருடப் பிறப்பு, ஐப்பசியில் மிக விசேடமான பலனும் பெறுவர்.

# தீர்த்தச் சிறப்பியல்

கிழக்கு திசையில்: தைப்பூசத்தில் நீராடி பிரம்ம ஹத்தி தோஷத்தைப் போக்கி கொள்ள உதவும் இந்திர தீர்த்தம் அமைந்திருக்கிறது. தேவேந்திரன் நீராடி, தன் தீவினைகளைப் போக்கிக்கொள்ள உதவியது.

தென் கிழக்கில்: பங்குனிப் பௌர்ணமியில் மூழ்கி பெண்களால் ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக்கொள்ள உதவும் அக்கினி தீர்த்தம் உள்ளது. அக்கினி தேவன் தன் பாவங்களைக் கழுவிக்கொண்ட தீர்த்தம் இது ஆகும்.

தெற்கில்: இயமன் மூழ்கி வியாதி நீங்கப்பெற்ற இயம தீர்த்தம்.

நிருதி மூலையில். நிருதியானவன் தன்னை எதிர்த்திட்ட பேயைத் தன்வசமாக்கிக் கொள்ள உதவிய நிருதி தீர்த்தம்.

மேற்கில்: வருண தீர்த்தம் நவக்கிரகப் பலனைத் தரும்.

வாயுதிக்கில்: வாயு தீர்த்தம் துன்பத்தைப் போக்க உதவும்.

வடக்கில்: குபேர தீர்த்தம் வறுமையை ஓட்டும்.

ஈசானியத்தில்: அசுவினி தீர்த்தம் சிவபதத்தை நல்கும். மற்றும் இயம தீர்த்தத்துக்கு தெற்கிலுள்ள அகத்திய தீர்த்தம் கல்வியறிவைப் பெருக்கவும், குபேர தீர்த்தத்துக்கு அருகிலுள்ள வசிட்ட தீர்த்தம் ஐப்பசியில் மூழ்கி



சாஸ்திர தேர்ச்சிப்பெறவும் உதவுகின்றன. இன்னும் இதுபோல் 360 க்கும் மேற்பட்ட தீர்த்தங்கள் நிறைந்திருக்கின்றன.

## பிறவிப்பிணி தீர...

மேலும் இம்மலைக்கு வடக்கிலுள்ள திருநதியானது நினைத்த வரத்தையும், தெற்கிலுள்ள சோணை நதியானது துன்பத்தை அகற்றிடவும், மேற்கிலுள்ள புண்ணிய நதியானது எழில் கொழிக்கும் அழகு உருவத்தையும், திருநதிக்கு வடக்கிலுள்ள சேயாறு நினைத்த வரத்தையும் நல்கும் பான்மையன ஆகும்.

ஸ்ரீ அருணாசலேசுவரர் கோயிலுக்கு உள்ளே இருக்கும் சிவகங்கைத் தீர்த்தம் தேவரிலும் மேன்மையான பதவியையும், சிவகங்கைக்குக் கிழக்கிலுள்ள சக்கரத் தீர்த்தம் சிவபதத்தையும், அக்கினி திசையிலுள்ள பிரம தீர்த்தம் பிறவிப் பிணியைப் போக்கிடும் பெருவாழ்வையும் நல்கும்.

# புராணச் சிறப்பியல்

## அம்பாள் திருஅவதாரம்

தக்கன் தான்பெற்ற பெருவலியால் சுவாமிக்கு மாமனாராகும் தகுதியைப் பெற்றுவரும் நாளில், சுவாமி எழுந்து நின்று தனக்கு மரியாதை செய்யவில்லையே என்று கோபம் கொண்டு, அவரினும் மேலான பதம் பெற்றிட பெரியதொரு யாகம் செய்கிறான். பதி சொல் தவறிவந்த பாவையாம் அம்பிகைக்கு தக்கனது யாகத்தில் அவமதிப்பு ஏற்படுகிறது. சிவ நிந்தனையோடு நடக்கும் இந்த யாகத்தை சபித்து தக்கன் வளர்த்த தேகம் இருக்கக் கூடாது என்று போக்கிக் கொள்கிறாள், தேவி.

## அகோர வீரபத்திரர் உதயம்

இஃது அறிந்த எம்பெருமான் சிற்றமுற்றுச் சீறியெழ அவரது நெற்றிக் கண்ணினின்று அகோர வீரபத்திரர் தோன்றுகிறார். சுவாமியை வணங்கியவர், பூதகணங்கள் புடைசூழ நேரே யாகசாலைக்குச் சென்று, தன்னை எதிர்த்திட்ட தேவர்களையும் இருடிகளையும் தருக்கிவந்த தக்கனையும் கொன்று யாகசாலையையும் அழித்து மீள்கிறார். பின் சுவாமியின் கோபம் தணிந்து கருணை பிறக்கிறது. ஆம்! இறந்தவர்கள் மீண்டு எழுகிறார்கள். ஆனால் சிவநிந்தனை செய்த தக்கன் மட்டும் ஆட்டுத்தலை உருவுடன் எழுப்பப் பெறுகிறான்.

ஸ்ரீ தேவியானவள், தான் சிவ நிந்தனை செய்த தக்கன் மகளாம் தாட்சாயணி என்னும் பெயர் போகுமாறு மீண்டும் இமயகிரியரசனுக்கும் அவன் மனைவி மேனாவுக்கும்



மகளாக திருவவதாரம் செய்கிறாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தவள், தம் இறைவனையடைய ஐந்தாம் பிராயத்திலேயே தவம் நோற்கிறாள்,

## பார்வதி திருமணம்

அப்போது தேவர்களுக்கு தாரகாசுரனால் துன்பங்கள் நேருகின்றன. அவை நீங்க, பரமசிவனுக்கு பார்வதி தேவியாரிடத்தில் சுப்பிரமணியக் கடவுள் உதிக்க வேண்டும் என்று உணர்த்துகிறார், பிரமன். அதனால் இமய மலையில் யோகு சாதித்துக் கொண்டிருக்கும் பரமசிவன், பார்வதியாருக்குத் திருமாங்கல்ய தாரணம் செய்யும்படியான ஏற்பாடுகளைச் செய்ய முற்படுகின்றனர் தேவதேவர்கள். அவ்வகையில் பரமசிவன் கயிலாயத்திம்கு எழுந்தருளி திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கிறார். திருமண கோலத்தில் சுவாமி இடபவாகனத்தின் மீது எழுந்தருளி, தேவர் இருடிகள் புடைசூழப் போந்து. வேத விதிப்படி பார்வதி தேவியை மணந்து கொள்கிறார். அதன்பின் உலகுய்ய-தேவர்தம் துயர்துடைக்க-ஒரு திருமுருகன் தோன்றினான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

## திருக்கண் புதைத்தமை

ஒருநாள்...சுவாமியின் திருக்கண்களை பார்வதி தேவி வேடிக்கையாக மூடுகிறாள். அதனால் அவரது கண்களாகிய சூரிய சந்திரர் மறைக்கப்பட, எல்லா உலகும் இருண்டு விடுகிறது. இருண்ட உலகில் பாவங்கள் பெருகி தேவியை வந்தடைகின்றன. அதனால் அவளது பொன்னான தளிர்மேனி கருத்த நிறத்தை எய்துகிறது.

## காஞ்சியில் காமாட்சி அறம் வளர்த்தமை

கண்களை மூடிய பாவம் கழிய தேவியானவள் காஞ்சீபுரம் சென்று முப்பத்திரண்டு தருமங்களையும் முறையோடு வளர்த்து, காமாட்சி என்னும் திருநாமம் விளங்க கம்பா நதிக்கரையில் ஒற்றை மாவடியின்கீழ் மணலைக் குவித்து இலிங்காகாரமாகத் தொழுகிறாள். அத்தருணம் கம்பா நதி பெருகி வருவது கண்டவள், இலிங்கத்துக்கு எவ்வித ஆபத்தும் வாராதிருக்கக் கருதி, தன் இரு வளைக் கரங்களாலும் மார்பு இறுகத் தழுவிக் கொண்ட நிலையில், 'தழுவக் குழைந்த நாத'ராக எம்பெருமான் காட்சி தந்து அருள்பாலிக்கிறார். ஆஹா...அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்!

## திருவண்ணாமலையில் இடப்பாகம் பெற்றமை

பிறகு தேவி, திருவண்ணாமலை போந்து, கௌதமருடைய ஆசிரமத்தில் தங்கி, ஊசி முனையில் ஒரு கால் பெருவிரலை ஊன்றி கடுந்தவம் நோற்று வருகிறாள்.

ஸ்ரீ அருணாசலத்தில் எழுந்தருளியிருக்கும் பரம் பொருளை வழிபட பொன்மயமான கோயிலுக்குச் செல்கிறாள் அம்பிகை. பிரம தீர்த்தத்தில் மூழ்கி, விபூதி தரித்து கைகளை சிரமேல் குவித்து தெண்டனிட்டு, கௌதமர் கூறியபடி உள்ளே சுவாமியைக் கண்ணாரக் கண்டு வழிபாடியற்றுகிறாள். பின் பரவசமாய்ப் பாடி ஆடி, ஆனந்தக் கண்ணீர் பெருகிட வலம் வருகிறாள். அவள் வலம்வரும் வகையை எம்மால் இயம்பும் தகையதோ!



கார்த்திகை நாளில் ஆகம விதிப்படி திருவிழா நடத்துகிறாள் அம்பிகை. அவ்வமயம் மலைமீது ஒரு சோதி தோன்ற எம்பெருமான் காட்சி தருகிறார்.

அக்கினி மலையை அக்கினி திசையில் தொழுது, தெற்கு திசையும் நிருதி மூலையும் தாண்டி மேற்றிசை செல்கிறாள். அத்தருணம் சுவாமியின் தரிசனம் பெற்று, ஸ்ரீ அருணாசலேசுவரரது நடனபாதத்தை வணங்கி வழிபடுகிறாள்.

ஈசான்ய திசையில் பரமசிவன் இடப வாகனத்தில் தோன்றி, 'இடப்பாகத்தில் இருப்பாயாக!' என்று கையால் அணைத்துக்கொள்ளும்போது பூமாரி பொழிகிறது. அத்தருணம், சுவாமியினுடைய பாதி வலது பக்கத்திலும், அம்மனுடைய பாதி இடது பக்கத்திலுமாக இரண்டு தேகமும் ஒரு தேகமாய்ப் பிரகாசிக்கிறது. தேவர்களின் மகிழ்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமோ!

# தெய்விகச் சிறப்பியல்

**மகாவிஷ்ணு :**

கற்ப காலம் முடிந்து அந்தகாரம் நீங்கி விடிவு ஏற்படும் நேரம். மகாவிஷ்ணு நித்திரை தெளியாமல், பிரமனைப் படைக்காமல், பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறார். இவ்விநோதத்தைக் கண்ட சின்மய ரூபராகிய யோகிகள், இருள் அகன்று உலகுண்டாக சிவபெருமானை வணங்குகிறார்கள்.

உடனே எம்பெருமான், 'சோதியாய், சுடராய், சூழ் ஒளி விளக்காய்' தோன்றுகிறார். இருள் அகன்று விடுகிறது. உலகங்கள் உதிக்கின்றன. விஷ்ணு திடுக்கிட்டு கண் விழித்தவராய், பிரமனை சிருட்டிக்காமல் காலந் தாழ்த்தியதன் தீவினையை நினைந்துருகி இத்தலம் நாடி வருகிறார். இந்திர தீர்த்தத்தில் மூழ்கி, மலைவலம் வந்து சுவாமியை வழிபட்டுப் பாவம் போக்கிக் கொள்ளுகிறார்.

**பிரமன் :**

பிரமன் பூசித்துப் பேறுபெற்ற பெருமையை, 'ஸ்ரீ ஆதி அருணாசலேசுவரர் கோயில்' என்னும் தலைப்பில் கண்டு இன்புறுக.

**சூரியன் :**

சிவ சொரூபமாய் விளங்கும் சிவமலை திருவண்ணாமலை ஆகும். ஒரு காலத்தில் சூரியன் அகந்தையால், 'இது ஒரு



மலைதானே' என்று நினைக்கிறான். ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத் தேரை இம்மலையுச்சியில் செலுத்துகையில், மலை வெடித்து வெப்பத்தைக் கக்குகிறது. அதனால் தேரும் பரிகளும் எரிந்து சூரியனும் மதிகெட்டு வீழ்கிறான்; அவன் ஆணவமும் அற்று வீழ்கிறது.

பின் பிரமனின் திருவருளால் இம்மலையை பூமாரி பொழிந்து வலம் வந்து வழிபட்டு பேறுபெறுகிறான். சூரியன்.

**சந்திரன் :**

தவத்தில் சிறந்த தக்கனுக்கு உரோகிணி முதலிய இருபத்தேழு பெண்மக்கள் உண்டு. அவர்கள் அனைவரையும் சந்திரனுக்கு மணம் முடித்துத் தருகிறான் தக்கன். ஆனால் சந்திரனோ, உரோகிணி மீது மட்டுமே அதிக விருப்பம் வைத்து, மற்றவர்களை நேசிக்காமல் வாழ்க்கை நடத்தி வருகிறான்.

மற்ற பெண்களின் மனக் கவலையை அறிந்த தக்கன், எல்லையில்லாக் கோபம் கொள்கிறான். 'சந்திரனே! நீ உனது மனைவியர் எல்லோரிடத்திலும் சமமான விருப்பைக் காட்டவில்லை. ஒருத்திமீது மட்டும் கொள்ளை விருப்பம் கொண்டிருக்கிறாய். அதனால் உன் உடல் குன்றிப் போவதாக!' தக்கன் சாபத்தை ஏற்ற சந்திரன், அதனைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இத்தலம் வந்து பெறற்கரிய பேறு பெறுகிறான்.

**அட்ட வசுக்கள் :**

ஒரு சமயம் பிரமனது சபையில் அட்ட வசுக்களும் வந்து, தற்பெருமைப் பேசிக் கொள்கின்றனர். அவர்

களுக்குப் பாடம் புகட்ட நினைத்த பிரமன், 'நீங்கள் தவமெல்லாம் இழந்து விடுவீர்களாக!' என்று சபிக்கிறார்,

இச்சாபம் நீங்க, அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் அட்டவசுக்கள் கங்கைக் கரையிலும், பின் திருவண்ணாமலையின் எட்டு திக்குகளிலும் திக்குக்கு ஒருவராக அமர்ந்து அருமையான தவம் செய்கிறார்கள்.

அப்போது அக்கினி மலையானது எட்டு திக்குகளிலும் எட்டுத் திருமுகங்களைக் காட்டி அட்ட வசுக்களுக்கும் காட்சி கொடுத்தருள்கிறார்.

**வச்சிராங்கத பாண்டியன் :**

இவன் மலைமகளே மகளாக வந்த மலயத்துவச பாண்டியன் மரபில், தேவேந்திரனே நரேந்திரனாகப் பிறந்தவன்; முத்தமிழை முறையோடு வளர்த்த மதுரையம்பதியை ஆண்டவன். 'முந்தின திசைக்கரி முகத்தெழுதி வைத்தோன்'-என்று இவனது வீரத்தை அருணாசலப் புராணம் பாராட்டுகிறது. ஐராவதத்தின் முகத்தில் இந்திரனைத் தன் வளைகொண்டு வென்ற வெற்றிச் செய்தியை எழுதி வைத்த சிறப்புடையவன்.

இப்பாண்டியன் குதிரை மீது அமர்ந்து வேட்டையாடி வரும்பொழுது, ஒரு புழுகுப்பூனையைத் துரத்த நேருகிறது. அப்பூனையும் திருவண்ணாமலையை வலம்வந்து வீழ்ந்து இறக்கிறது. பாண்டியன் ஏறிவந்த குதிரையும் உடன் மடிகிறது. இரண்டும் இரு வித்தியாதரர்களாகப் புனித தேகம் பெறுகிறார்கள், கலாதரன். காந்திசாலி என்போர் துர்வாச முனிவரின் சாபத்தால் புழுகுப் பூனையும் குதிரையுமாகப் பிறந்ததையும், ஸ்ரீ அருணாசலத்தை வலம்வந்த விசேடத்தால் சாப நீக்கம் எய்தியதையும் அவர்கள் கூறக் கேட்கிறான் பாண்டியன்.



பின் தன் அரசுரிமையை மகன் இரத்தினாங்கதனிடம் ஒப்படைத்துவிட்டு, தன் காலினால் நடந்து மலைவலம் வந்து ஸ்ரீ அருணாசலேசுவரரைப் பூசித்து, திருப்பணிகள் பல புரிந்து மேலான பதம் பெறுகிறான்.

**வல்லாள மகாராஜன் :**

வல்லாளன் என்னும் நல்லாளன் ஹொய்சள வம்சத்தைச் சார்ந்தவன். அருணகிரிநாதர் தோன்றுவதற்கு நூறு ஆண்டுகட்கு முன்னரே-பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவன்; எஞ்ஞான்றும் சிவபெருமானை நெஞ்சில் இறுத்தி, திருவண்ணாமலை நாட்டை அறம் வழுவாமல் மல்லம்மை, செல்லம்மை என்னும் இரு பட்டத்தரசிகளுடன் ஆண்டுவந்த பெருவீரன்.

**திருவிளையாடல் காணீர் !**

இவ்வரசனுடைய பிள்ளையில்லாப் பெருங்குறையைப் போக்கி, அவனது அளக்கலாகா பக்தியை உலகுணரச் செய்யத் திருவுளம் பற்றுகிறார், எம்மிறைவர். தவத்தலைவர் வேடம் பூண்டு, தமது கணங்களை எல்லா விலைமாதர் வீடுகளிலும் இருத்தி மீண்டவர், 'இன்றிரவு ஒரு மாதை எமக்குக் கிட்டும்படிச் செய்வாயாக!'- என்று அரசனிடம் வேண்டுகிறார். ஆஹா...'வேண்டத்தக்க தருவோய் நீ' என்று வேண்டி நிற்கும் பக்தர்களிடமே வேண்டும் இறைவனின் எளிவந்த வான்கருணையை என்னென்பேன்?

## அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை

அரசன் எங்கு தேடியும் கணிகையர் ஒருத்திகூட கிடைக்கவில்லை. கடவுள் சோதனையை அறியாத காவலன், கவலையே உருவாய்க் கலங்குகிறான். தன்னை நாடி வந்த அடியார் விருப்பை ஈடேற்றி வைப்பது அன்றோ அரசர் கடமை?

இந்நிலையில் இளைய பத்தினியாம் செல்லம்மா தேவி அரசனது அனுமதியோடு, அடியார் தங்கியிருந்த அறை நோக்கிச் செல்கிறாள். ஆங்கே...? பூ மஞ்சத்தில் அறிதுயிலில் ஆழ்ந்து இருக்கிறார் அடியார். தேவி தன் இரு தளிர் கரங்களாலும் மெய்யடியார் மெய் தீண்டியதுதான் தாமதம். அக்கணமே அவர் 'பளிச்'சென்று பால்மணம் மாறா பச்சைக் குழந்தையாய்-பல்கோடி சூரியப் பிரகாசம் பொருந்தியப் பவளக் குழந்தையாய்-அவளது தளிர்க்கரங்களிலே தவழ்கிறார்; பின் காட்சி தருகிறார். எம்பெருமான் திருவிளையாடல் திறத்தை யாரே விண்டுரைக்க வல்லார்!

'நாமே உமக்குப் பிள்ளையாய்த் தோன்றி இருக்கிறோம் உமக்குப் பின் புத்திரன் செய்ய வேண்டிய சகல கிரியைகளையும் நாமே செய்து வருவோம்!'

இறைவர் தம் அருள் வாக்குக்கிணங்க, ஆண்டு தோறும் ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் மாசி மகத்தில் பள்ளிகொண்டா பட்டுக்கு எழுந்தருளி, வல்லாள மகாராஜனுக்கு உத்தரகிரியை நடத்தும் உற்சவம் இன்றும் நடைபெற்று வருகிறது.

### பிரதத்தன் :

பிரதத்தன் என்னும் காசிராசன் தென்னிந்திய சுற்றுப் பயணத்தின்போது, இத்தலம் வருகிறான். சுவாமி



தரிசனம் செய்யும்போது, ஆங்கு இருந்த கணிகையர்குலப் பெண்ணொருத்தியைக் கண்ணுற்றுத் தகாத நினைப்பில் ஆழ்கிறான்.

அக்கணமே அவன்முகம் குரங்கு முகமாகிய பின்பு, அரசன் தன் இழிநிலையை நினைந்து, நினைப்பை மாற்றிக் கொள்கிறான். பல திருப்பணிகளைச் செய்து இப்பெருமானைப் பூசித்துப் பேறு எய்துகிறான்.

### புளகாதிபன் :

புளகாதிபன் என்னும் அசுரன் புழுகுப் பூனையாக வந்து அருணகிரியின்மீது உலவி புழுகுகளை இறைத்து வந்த விசேடத்தால், பெரும்பலம் பெற்று தேவர்களைத் துன்புறுத்தி வருகிறான். இஃது அறிந்த பெருமான், 'உனது உயிரைவிட்டு விடுவாயாக!' என்று கூறியவர், 'இனி புழுகுப் பூனைகளின் புழுகை நமது திருமேனியில் ஏற்றுக்கொண்டு, 'புழுகணி இறைவர்' என்னும் திருநாமத்தோடு விளங்குவோம்!' என்று அருளுகிறார்.

அசுரனும் இறந்துவிடுகிறான். இது முதல் தேவர்களும் மனிதர்களும் இப்பெருமானின் சிரசில் புழுகுக் காப்பு சாத்தி வருவது வழக்கமாய் உள்ளதை அறியலாம்.

# அற்புதச் சிறப்பியல்



**அருணகிரிநாதர் :**

திருவண்ணுமலைத் திருத்தலத்தில் கோயில் கொண்ட ஸ்ரீ அருணசலேசுவரரை நினைந்து வழிபட்டு, ஆடல் பாடல் அபிநயங்கள் புரிந்து தேவத்தொண்டு செய்துவரும் மரபினள் முத்தம்மை என்னும் மாது நல்லாள். அவள் மணிவயிறு பெற்ற பாக்கியத்தால்-முருகப் பெருமானின் பெருங் கருணைத் திறத்தால், 'ஒரு மகா புருஷன்' உலகில் உதிக்க காரணமாகிருன்.

காஞ்சிபுரத்தில் பிறந்தோரை, 'ஏகாம்பரம்' என்றும், ஸ்ரீரங்கத்தில் பிறந்தோரை, 'அரங்கநாதன்' என்றும், தில்லையில் பிறந்தோரை, 'நடேசன், சிதம்பரம்' என்றும், மதுரையில் பிறந்தோரை 'சோமசுந்தரம்' என்றும் பெயரிட்டு வழங்கும் பெற்றோரைப் போல, முத்தம்மையும் அண்ணுமலையில் பிறந்த குழந்தைக்கு, 'அருணகிரி' என்றே நாமம் சூட்டுகிருர்.

**காலம்**

கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டின் இடைப்பட்ட பகுதி; இற்றைக்கு சுமார் 475 ஆண்டுகளுக்குமுன் பிரபுட தேவராயன் என்னும் அரசன் அரசோச்சிய காலம். இவருக்குச் சமகாலப் புலவர்களாக விளங்கியோர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆழ்வார், இரட்டையர், காளமேகப் புலவர் முதலானோர்.

**சமயம்**

இவர் கலியுக வரதனுகிய முருகப் பெருமானிடம் பேரன்புகொண்டு பத்திசெய்து போற்றிப் புகழ்பாடிய பெருந்தகையாளர். முருகனே முழுமுதற் கடவுள் என்று உபாசிக்கும் கௌமார சமயம் இவருடையது. இதில் அகத்தியர், நக்கீரர், குமரகுருபரர், சிதம்பர சுவாமிகள் முதலானோரினும் இவர் முதன்மை பெற்றிடக் காரணமாய் இருப்பது, தமது திருப்புகழ் அனைத்தும் முருகன் மீது அமைந்திருப்பதனுலேயேயாகும்.

**நூல்கள்**

பதினாறாயிரம் திருப்புகழ் பாக்கள், கந்தர் அலங்காரம் கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, சீர் வகுப்பு, கடைக் கணியல் வகுப்பு, வேல் வகுப்பு, மயில் வகுப்பு, சேவகன் வகுப்பு, மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலியன.

**கோபுரத்து இளையனுர் காட்சி**

ஐந்து வயதான அருணகிரி ஆரம்பப் பள்ளிக்கு அனுப் பப்படுகிருன். ஆனுல் அவன் மனம் படிப்பில் சென்ருல் தானே! ஏழு வயதில் அன்புத்தாயின் அரவணைப்பு அகன் றிட, 'ஆதி' எனும் அக்காளிடம் வளர்ந்து வருகிருன்.

காலச் சக்கரம் உருள்கிறது. இளமைத் துடிப்பு எழுகிறது: வீணை சுற்றித் திரிகிருன். பின், வேசியர் ஆசையில் வீழ்ந்துபட்டவராய், பொன்னும் பொருளும் கொடுத்து, போகம் துய்த்துவரும் நாளில்தான் எத்தனை அனுபவங்கள்...! இந்நிலையில் அருணகிரி,

அவனிதனி லேபிறந்து மதலையென வேதவழ்ந்து
அழகுபெற வேநடந்து இளையோனுய்,
அருமழலை யேமிகுந்து குதலைமொழி யேபுகன்று
அதிவிதம தாய்வளர்ந்து பதினாருங்

சிவகலைகள் ஆகமங்கள் மிகவுமறை ஓதும்அன்பர்
திருவடிக ளேநினைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசைமிஞ்சி யாயுழன்று வெகுகவலை
திரியும்...'

—அவல நிலைக்காளாகி கைப்பொருள் ஒன்றின்றி, தமது தமக்கையின் சொல்லையும் தாங்கொணாது செல்கிறான், செல்லும் வழி அறியாமல்...!

குன்று உறழ் வல்லாள கோபுரத்தின் மீதேறி நின்றவர், 'முருகா; என்னை ஏற்றுக்கொள்!'–என்று கூறி கூசாமல் குதித்து விடுகிறார். பக்குவமுற்ற பருவம் வந்திட்ட அவருக்குப் பரமனும் குமரனே வந்து தடுத்தாட்கொண்ட நிலையில், 'கோபுரத்து இளையனார்' ஆகக் காட்சி தருகிறார். திருக்கோபுரத்தின் வடபால் எழுந்தருளி காட்சி தந்தமையை, 'அடல் அருணைத் திருக்கோபுரத்தே அந்த வாயிலுக்கு வட அருகில் சென்று கண்டு கொண்டேன்!'– என்று அலங்காரம் செய்கிறார் அருணகிரியார்.

குருவாய் வந்த குமரனும் இவரை உய்விக்கத் திருகொண்டு, தமது திருக்கரத்தால் திருநீறிட்டு, அருட் கண்களால் அழகுற நோக்கி, திருவடிகளைச் சிரசின் மீது சூட்டி, செபமாலை தந்து சடாட்சரம் ஓதி, 'சும்மா இரு; சொல்லற!'- என்னும் மௌன உபதேசத்தை அருளி ஆட்கொள்கிறார். 'அருணை நகர்மிசை கருணையோ டருளிய, மவுன வசனமும் இருபெரு சரணமும் மறவேனோ!'– என்பது அவர் திருப்புகழ். 'குருவாகி வந்ததும் அக்குமரனே எனத் தேறி, ஒருவாமல் இரவுபகல் உருச்செபித்து தியானித்து வருகிறார். இப்படி பன்னீராண்டுகள் பறந்தோடுகின்றன.



ஒரு நாள்...முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமான் தோன்றி, 'நம் பாதமலர் பாடு நீ' என்ன, 'அடியேனும் எப்படி பாட என்ற அளவில், பத்தி தரு முத்திநகை அத்தி இறைவா எனப் பாடென்று சொல்லி அருள்கிறார். முருகனருள் பெற்ற அருணகிரியார் திருவாய் மலர்ந்திட, முதிரும் சுவைகொண்ட மதுர மிகு செய்யுட்கனிகள் உதிர்கின்றன.

தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன
தத்தத்தன தத்தத்தன தன–தனதான

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபரன் – என ஓதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரும் – அடிபேணப்

பத்துத்தலை தத்தக்கணை தொடும்
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் – இரவாகப்

பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ – தொருநாளே;

தித்தித்திசை ஒக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்க நடிக்கக்கழுகொடு – கழுகாடத்

திக்குப்பரி வட்டக்கலைகொடு
சித்ரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குத்திரிகிடம் – எனஓதுக்

கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை குக்குப்பிடியென – முதுகூகை,

கொட்புற்றெழு நட்புற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வெற்றிபொரவல – பெருமாளே.

*பிறகு அவர் திருவண்ணாமலையிலிருந்து புறப்பட்டு, வயலூர் மேவிய வள்ளலைக் கண்ணுற்று, விராலி மலையை வியந்து போற்றி, பழனியில் பரவசப்பட்டு, மதுரை, கொடுங்குன்றம், குன்றக்குடி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருவேற்காடு, காஞ்சிபுரம், திருத்தணிகை, வள்ளிமலை, காளத்தி, ஸ்ரீசைலம், சென்னை, காசி முதலிய எண்ணிலா தலங்களைப் பாடி அவன் திருப்புகழ் உலகெலாம் நின்று நிலவச் செய்கிறார்.*

### வில்லியாருடன் வாது

*வில்லிபுத்தூரார் நடுநாடு என்னும் சனியூரில் பிறந்து, வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை மிகப்பெற்று, வரபதியாட்கொண்டான் என்னும் அரசனின் ஆஸ்தானக் கவிஞராய் இலங்கி, மகாபாரதத்தை மதுரத் தமிழில் பாடிய பெருமைக்குரியவர். அதனால் மகிழ்வுற்ற அரசன், பிற பரிசுப் பொருள்களோடு வானாயுதமும் (துறடு) பரிசாகக் கொடுத்திருக்கிறான். அவற்றைக் கொண்டு தம்மிடம் தோற்றுப்பட்ட போலிப்புலவர்களின் செவிகளை அறுத்து வரும்பொழுது, அருணகிரியாரின் அருமைத் திருப்புகழ் அவரது செவிகளில் விழுகிறது. பொறுப்பாரா பொல்லா வில்லியார்...?*



*அரசன் நடுவராக வீற்றிருக்க அரச அவையில். 'வில்லியார்–அருணகிரியார் வாதப் போர்' நிகழ்கிறது, முதலில் வில்லியார் *அழகர் அந்தாதி பாட அருணகிரியார் பொருள் உரைத்து விடுகிறார். (*பாவலர் சரித்திர தீபகம் கூறும்.) அடுத்து அருணகிரியார் 'கந்தர் அந்தாதி' பாடிட வில்லியார் விரைந்து பொருள் உரைத்து வருதலைக் கண்டவர், ஸ்ரீ கந்தப் பெருமானை நினைத்து 54ஆம் பாடலை அற்புதமாகப் பாடுகிறார் :*

'திதத் தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்ததி தித்திதத்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாதத்து
திதத்தத்தத் தித்தித் திதீதி திதிதுதி தீதொத்ததே'

முதல்வரி : திதத், தத்தத், தித்த - *திதத் தத்தத் தித்த என்னும் தாள அளவை.* திதி - *திருநடனத்தால் காக்கின்ற,* தாதை - *பரமசிவனும்,* துத்தி – *படத்தையுடைய* தத்தி – *பாம்பின்து;* தா - *இடத்தையும்.*

இரண்டாவது வரி : திதம் - *நிலைபெற்றதும்;* தத்தி - *ததும்புகின்றதுமான,* அத்தி - *சமுத்திரத்தைப் பாயாகக் கொண்டவரும்;* தித்தித்த – *தித்திக்கின்ற,* ததி - *தயிரை;* து- *உண்டவருமான;* தே - *தேவனாகிய கண்ணனும்;* துதித்து- *துதித்து வணங்குகின்ற,* இதத்து - *இதம் செய்பவரான;*

மூன்றாவது வரி : ஆதி – *முதல்வனே;* தத்தத்து - *தந்தங்களையுடைய;* அத்தி - *ஐராவதம் என்னும் யானையினது;* தத்தை - *கிளிபோலும் தெய்வ யானைக்கு;* தாத – *தொண்டனே;* தீதே - *தீமையே;* துதை - *நெருங்கிய;* தாது - *சப்த தாதுக்களால் நிறைந்த;* அதத்து - *மரணத்திற்கென்றே;*

நான்காவது வரி: உதி - பிறந்து; தத்து - மரணத்திற்கும் பிறப்பிற்கும் இடையில் பல தத்துகள்; தத்து - அமைவுற்றதும், அத்தி - எலும்புகளை உடையதுமான; தித்தி - பையாகிய இவ்வுடல்; தீ - எரியப் பெறுகின்ற; திதி - அந்நாளிலே; துதி - உன்னை இப்பொழுது துதிக்கும்; தீ - புத்தியானது; தொத்தது - உனக்கே அக்காலத்தும் அடிமையாகக் கடவது என்பதாகும்.

பொருளுரை · திதத் தத்தத் தித்த என்னும் தாள அளவைத் தன் திருநடனத்தால் காக்கின்ற பரமசிவனும், பிரமாவும், படத்தையுடைய பாம்பின் மேலுள்ள இடத்தையும், நிலைபெற்றுத் ததும்புகின்ற சமுத்திரத்தையும், பாயாகக் கொண்டு தித்திக்கின்ற தயிரை உண்ணும் தேவனாகிய விஷ்ணுவும், துதித்து வணங்கும் பேரின்ப சொரூபியாகிய முதல்வனே! தந்தங்களையுடைய ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற கிளி போன்ற தெய்வ யானையின் தொண்டனே! தீமையே நெருங்கிய சப்த தாதுக்களால் நிறைந்து மரணத்திற்கேன்றே பிறந்து பல தத்துக்கள் அமைவுற்ற எலும்புகளையுடைய பையாகிய இவ்வுடல் எரியப் போகிற அந்நாளில், உன்னை இப்பொழுது துதித்திடும் புத்தியானது அப்பொழுதும் உனக்கே அடிமையாகக் கடவது.

தகர வர்க்கத்தில் ஒரு மெய் கொண்டு வரும் பாடலின் பொருள் விளங்காது விழித்த வில்லியார், தோல்வியை ஒப்புக் கொள்கிறார். அவரைக் கர்ணதானம் செய்து, வாளையும் (துறடு) அவர்பால் ஈந்து, தமிழை ஆதரித்து வர விடுத்த அருணை அடிகளாரின் அருட்கருணைதான் என்னே!



## கம்பத்து இளையனார் காட்சி

திருவண்ணாமலையில் சம்பந்தாண்டான் என்னும் பெயருடைய இருவர் வாழ்ந்து வந்ததாக நூல்கள் கூறும். ஒருவன் திருவண்ணாமலை தேவஸ்தானத்தில் குருக்களாகப் பணிபுரிந்த புலமை வாய்ந்த வித்துவான். மற்றொருவன் சமணன்; மந்திரம் பெரிதும் கற்ற தேவி உபாசகன். அதனால் இவன் கொண்ட அகந்தைக்கு அளவேயில்லை. ஒரு சமயம் இரட்டையர் வந்தபோது, 'மன்னென்று துவக்கி மலுக்கென்று முடிய' ஒரு வெண்பா பாடும்படி பணித்தவன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

அருணகிரியாரின் பெரும் புகழ் என்னும் பிணியால் பீடிக்கப்பட்டுப் பொறாமை கொண்ட இவன், ஒருநாள் பிரபுட தேவராயன் சபையில் அருணகிரியாரை வரவழைக்கச் செய்கிறான். முதலில் தேவி தரிசனம் காட்டுவதாகக் கூறிய சம்பந்தாண்டான் போட்டியில் தோல்வி பெறுகிறான். ஆனால் அருணகிரியாரோ அடக்கமே உருவாய் ஸ்ரீ அண்ணாமலையார் கோயிலினுள் செல்லுகிறார். ஆங்கே சிவகங்கைத் தீர்த்தத்திற்கு வட புறம் இருக்கும் மண்டபத்தின் வடகீழ் தம்பத்தில் தடுத்தாட்கொண்ட தனிவேலன் திருக்காட்சி நல்கிட மணிரெங்கு ராகத்தில் திசிர துருவ தாளத்தில் பாடுகிறார்.

'ஐயனே! முன் ஒரு முறை பிரகலாதர் பொருட்டு திருமால் தூணிலிருந்து வெளிப்பட்டார்; இப்பொழுது அடியேன் பொருட்டு, கருணை வடிவாகிய தேவரீர் இத்தூணிலிருந்து வெளிப்பட்டுக் காட்சி தரவேண்டுமென்று துதித்து, 'எந்தத் திகையினும்' என்றும், 'கொடிய மறலியும்' என்றும், 'இருவர் மயலோ' என்றும் திருப்புகழ்ப் பாக்

களைப் பாடி, இறுதியில் ஆண்டவன் இன்னின்ன மூர்த்திகளுடன் ஆடிக்கொண்டு வந்து காட்சிதரவேண்டும் என்று உளமுருகிப் பாடுவதைப் பாருங்கள் :

‘அதல சேட ஞராட அகில மேரு மீதாட
அபின காளி தாளுட – அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாளம் – அவையாட;

மதுர வாணி தாளுட, மலரில் வேத ஞராட,
மருவு வானு ளோராட, - மதியாட,
வனச மாமி யாராட, நெடிய மாம ஞராட,
மயிலு மாடி நீயாடி – வரவேணும்;

கதைவி டாத தோள்வீமன் எதிர்கொள் வாளி யாள்நீடு
கருத லார்கள் மாசேனை – பொடியாகக்
கதறு காலி போய்மீள, விஜயன் ஏறு தேர்மீது
கனக வேத கோடூதி – அலைமோதும்;

உததி மீதி லேசாயும் உலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் – மருகோனே!
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் – பெருமாளே! ’

பாட்டு முடிகிறது. ‘பளிச்’ சென்று முருக தரிசனம் கிடைக்கிறது. அருணை முனிவருடைய அன்புக்குக் கட்டுப்பட்டு, இவ்வண்ணம் தன் அழகுத் திருக்கோலத்தைக் காட்டிய இடமே, ‘ஸ்ரீ கம்பத்து இளையனார் கோயில’ ஆகும்.

கதை விடாத தோள்வீமன் எதிர்கொள் - கதாயுதத்தை விடாது தோள்மீது வைத்துள்ள வீமசேனனால் எதிர்க்கப்பட்டதும், வாளியால் நீடு - ஆயுதங்களினால் நீண்ட வலிமையுள்ளதுமாகிய, கருதலார்கள் மாசேனை பொடியாக – பகைவர்களுடைய பெரிய சேனையானது மாண்டு பொடிபடும்



படி, கதறி காலிபோய் மீள – பயத்தினால் கதறும்படியான பசுக் கூட்டங்கள் பயம் நீங்கி மீளும் பொருட்டு, விஜயன் ஏறு தேர்மீதில் – அருச்சுனன் ஏறியுள்ள தேரின்மீதிருந்து, கனக வேத கோடு ஊதி – பொய்மயமாய் வேத நாதத்துடன் கூடிய சங்கத்தை ஒலித்தவரும், அலைமோதும் உததி மீதிலே சாயும் உலகமூடு சீர்பாதன் – அலைகள் மோதுகின்ற கடலின் நடுவே கிடக்கின்ற உலகத்தை ஓர் அடியால் அளந்துமூடிய சிறந்த திருவடியை உடையவரும், உவணம் ஊர்தி – கருடவாகனரும் ஆகிய திருமாலின், மருகோனே - திருமருகனே!

உதயதாம மார்பான – ஒளிமிகு மாலையணிந்த மார்புடன் கூடிய, பிரபுட தேவ மாராயன் உளமும் ஆட வாழ் தேவர் பெருமாளே - பிரபுடதேவ மகா மன்னனுடைய உள்ளமும் களிக்கும்படி எழுந்தருளியுள்ள - தேவர்கள் போற்றும் பெருமை மிகுந்தவரே!

அதலசேடனுராட – அதல உலகிலே வாழும் ஆதிசேடன் தனது பண மகுடங்களை விரித்து ஆடவும், அகில மேரு மீதாட – மண்ணகமும் மகாமேருமலையும் ஆடவும், அபின காளிதாளுட - சிவத்திற்கு அன்னியம் இல்லாதவளாகிய காளிதேவி ஆடவும். அவளோடு அன்று – அக்காளி தேவியுடன் அந்நாளில், அதிரவீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட - உலகமெலாம் அதிரும்படி கரசரணங்களை வீசி வாது புரிந்து திருநடம் புரிந்த சிவபெருமான் இடப வாகனத்தின் மீது ஆடவும், அருகு பூத வேதாளம் அவையாட - தேவரீரது பக்கத்தில் பூத வேதாளங்கள் யாவும் ஆடவும், மதுர வாணி தாளுட – இனிய வீணைகானம் புரியும் கலைமகள் ஆடவும், மலரில் வேதனுர் ஆட – தாமரை மலர்மீது வாழ்கின்ற பிரம தேவன் ஆடவும், மருவு வானுளோர் ஆட - உமது திருவடியைச் சார்ந்துள்ள அமரர்கள் ஆடவும், மதியாட . சந்திரன் ஆடவும், வனச மாமியார் ஆட - தாம

ரைக் கோயிலில் வாழும் உமது மாமியாராகிய இலக்குமி தேவி ஆடவும், நெடிய மாமனார் ஆட - நீண்ட வடிவுடைய உமது மாமனாராகிய நாராயண மூர்த்தி ஆடவும், மயிலும்- ஆட - மயில் வாகனமும் ஆடவும், நீயாடி வரவேணும் - அதன் மீது தேவரீரும் ஆடி வந்தருள வேண்டும்.

பொருளுரை: கதாயுதத்தை எப்பொழுதும் தோள் மீது வைத்திருப்பவனாகிய வீம சேனனால் எதிர்க்கப்பட்டதும், ஆயுதங்களால் மிகுந்த வலிமையுள்ளதுமாகிய பகைவர்களுடைய சேனைகள் அழியுமாறும், பயத்தினால் கதறுகின்ற பசுக்கூட்டங்கள் அச்சம் நீங்கி மீளும் பொருட்டும் பொன்மயமான சங்கத்தை ஒலித்தவரும், அலைகள் மோதுகின்ற கடலால் சூழப்பட்ட இப்பூமண்டலத்தைத் தனது திருவடியினால் அளந்து மூடியவரும், கருட வாகனத்தில் வருபவருமாகிய திருமாலின் திருமருகரே! ஒளிமிக்க இரத்தின மாலைகள் அணிந்த பிரபுடதேவ மாமன்னனுடைய மனமும் மகிழ்ச்சியினால் ஆடும்படி எழுந்தருளியுள்ள தேவர்கள் போற்றும் பெருமை யுடையவரே!

அதல உலகிலே வாழுகிற ஆதிசேடன் தனது பணா மகுடங்களை விரித்து ஆடவும், மண்ணகமும் மகாமேருவும் மிகவும் ஆடவும், சிவத்தை விட்டுப் பிரியாது இருக்கிற காளிதேவி ஆடவும், அக்காளிகாதேவியுடன் முன்னொரு சமயம் உலகம் அதிர கையையும் காலையும் வீசி வாது புரிந்த நடராச மூர்த்தி இடப வாகனத்தின் மீது ஆடவும், இனிய வேணுகாணம் புரியும் கலைமகள் ஆடவும், பூரண சந்திரன் ஆடவும், உமது மாமியாராகிய இலக்குமி தேவியும் மாமனாராகிய திருமாலும் ஆடவும், மயில் தனது தோகையை விரித்து ஆட அதன்மீது தேவரீர் ஆடிக் கொண்டு வந்து அருள்புரிவீராக!



## கிளி உருவக்காட்சி

முருகப் பெருமான் கோடி சூரிய பிரகாசத்துடன் தந்த திருக்காட்சியால் அரசனின் கண்ணொளி மழுங்கி விடுகிறது. தோல்வியுற்ற சம்பந்தாண்டான் அரசனை வஞ்சகமாகத் தூண்டுகிறான். பலன்...? அருணகிரியாரைப் பாரிசாத மலர் கொண்டுவந்து தனக்குக் கண்ணொளி தருமாறு வேண்டுகிறான் அரசன். அதற்கவர் உடன்பட்டவராய் தமது உடலை கோபுரத்தின் மேனிலையில் தக்க ஓரிடத்தில் மறைத்துவிட்டு, கிளி உருவில் விண்ணகம் போந்து பாரிசாத மலர் பறித்து வருகிறார். ஆனால் அதற்குள்... அந்தோ...சம்பந்தாண்டானின் சூழ்ச்சியினால் அவர் உடல் கொளுத்தப்பட்டு விடுகிறது.

(இவ்விடமே இன்றும் நினைவு கூறும் வகையில் அண்ணாமலையில் சமாதி ஒன்று கட்டப்பட்டு, அருணகிரி நாதர் உருவமும் பொறித்து வைக்கப்பட்டுள்ளது என்பர் ஆன்றோர்.)

இதனை ஞானக்கண் கொண்டறிந்த அருணகிரியார், கிளி உருவாகவே கோயில் கோபுரத்தின் மீது வந்தமருகிறார். (இக்கோபுரமே, 'கிளி கோபுரம்' என்று இன்றும் வழங்கப்படுகிறது. கோபுரத்தின் மீது ஒரு கிளி உருவமும் பொருத்தி வைக்கப்பட்டிருப்பது காண்க.) கிளியின் மூக்கில் பாடுபட்டுப் பறித்துவந்த பாரிசாத மலரின் நறுமணம் எங்கும் கமழ்கிறது. அரசனும் அவ்வூர் மக்களும் அறிந்து அவருடலைக் கொளுத்திய மடமைக்காகப் பெரிதும் வருந்தி, பின் போற்றிட கிளி உருவத்திலிருந்தே உலகுக்கு வழங்குகிறார், 'கந்தர் அநுபூதி'யை!

'கந்தர் அநுபூதி பெற்று கந்தர் அநுபூதி சொன்ன, எந்தை அருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ!'—என்ற

தாயுமானவர் வாக்குக்கிணங்க, நாமும் அவர் திருப்புகழ் பாடிப் போற்றிப் பெருவாழ்வு பெற்று இன்புறுவோமாக!

குறிப்பு. திருவண்ணாமலைத் திருத்தலத்தை அருணகிரியார் 87 பாடல்களால் புகழ்மாலை சூட்டுகிறார். அவைகளுள், 'அருணை' என்னும் பெயரில் 58 பாடல்களும், 'அருணைக் கோபுரம்' என்று 13 பாடல்களும், 'அருணைத் திருவீதி' என்று 8 பாடல்களும், 'அருணைக் கோபுர வடக்கு' என்று 2 பாடல்களும், வேறு 6 பாடல்களும் அடங்கும்.

## விருபாட்சி தேவர்

இவர் மல்லிகார்ச்சுனத்தில் அவதரித்த வீர சைவ மரபினர். சீலமும் தவமும் பொருந்திய நிலையில், சுவாமியை நினைந்துருகி திருவண்ணாமலையிலுள்ள ஒரு குகையில் யோகு சாதித்து முத்தி பெற்ற இடமே இன்றும், 'விருபாட்ச குகை' என்று வழங்குகிறது. குகை நமசிவாயர் காலத்தில் இவர் முத்தி யடைந்தவர். இதன் மேற்புறத்தில் கந்தாசிரமமும், மலையின் பாதி உயரத்தில் ஏழு சுனையும், குகையும், இயற்கை எழிலோடு அமைந்து விளங்குகின்றன.



## குகை நமசிவாயர் :

நமசிவாய மூர்த்தி என்னும் சித்தர் திருவண்ணாமலை மீது குகை செய்து அதில் நிட்டை கூடி வாழ்ந்து வந்தமையால் இப்பெயர் பெற்றவர். கன்னட தேசத்து வீர சைவ மரபினராகிய இவர், மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவதல யாத்திரை செய்து இப்பதி பெருமானைக் கண்டு இன்னருள் பெற்றவர்.

கலி வருடம் நாற்பத்து நான்காம் நூற்றாண்டில் இத்தலத்திற்கு வந்து 'குரு நமசிவாயர்' என்னும் சீடருடன் வாழ்ந்தவர். சீக்கிரத்தில் பக்குவம் பெற்ற சீடனை குருவே மெச்சும் வண்ணம், 'குரு நமசிவாயர்' ஆக்கி, சிதம்பரம் கோயில் திருப்பணிகளுக்காக அனுப்பி வைத்தவர். ஒரு ஆலமரத்தில் தூங்கும் ஊஞ்சலிட்டு யோக நித்திரை செய்து வந்த இவர், பல சித்துக்களை விளையாடியவர்.

ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் மீது தோத்திரப் பாக்களைப் பாடி நெடுங்காலமிருந்து இக்குகையிலேயே சமாதி சித்தரானவர். இக்குகையின் வடபுறம் முலைப்பால் தீர்த்தமும், மேற்புறம் அருவிக் கரையில் பாத தீர்த்தமும் விருபாட்ச குகையும் உள்ளன.

இப்பெரியார் அண்ணாமலையாரை உருகிப் பாடிப் போற்றிய பாடல்களுள் மனப்பாடம் செய்யத் தக்கன வருமாறு :

### அருணகிரி அந்தாதி

பேசுமவர் வஞ்சப் பிறப்புஅறுக்கும் என்று உலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா! - மாசிலா
அண்ணா மலையானே! அன்னை வயிற்று என்னை உருப்
பண்ணா மலையா! கண் பார்!

ஆமென்று நம்பி அனுதினமும் போற்றினால்
நாமென்று பற்றி நலமாகக் – காமித்துச்
சிட்டாகும் சோணகிரி சிந்தித்தால், நெஞ்சமே!
விட்டேகும் வெய்ய வினை.

காயம் நெகழாமுன் கண்கள் இருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன் - காயம்பார்த்து
ஓடிநமன் வாராமுன் உள்ளமே சோணகிரி
நாடி நம என்றே நட.

உரைக்கும் அடியார் உயிர்ப்பயிர் வாடாமல்
தரைக்குள் ஆனந்தவெள்ளம் தன்னை – நிறைக்குமே
எண்ணூர் புரமெரித்த எந்தை அருணகிரிக்
கண்ணூர் அமுதம்எனும் வார்.

## திருவருணைத் தனிவெண்பா

சொன்னந் தரும்குருவே! சோணா சலத்தானே!
இன்னம் பிறந்தாலும் இப்படிநின் - சந்நிதியை
நாடக் கிடைத்திடுமோ! நல்நெஞ்சே! நாம்அவரைக்
கூடக் கிடைத்திடுமோ கூறு.

ஆதிமறை தேடறிய அண்ணா மலையாருக்கு
ஏதுமுடி? ஏதுஅடி? என்று ஏத்துவேன்! - நீதி
ஒளியே! திருமேனி உம்பருக்கும் எட்டா
வெளியே! அவர்இருக்கும் வீடு.

வீடுதரும் சோணகிரி வித்தகனார் சத்தியுடன்
நீடுதேர் ஏறி அவர் நிற்கின்றார் ஓடி;
வடம் பிடிக்க வாருங்கள்; வந்தவர்க்கு முத்தி
இடம்கிடைக்கும் பாருங்கள் இன்று.

பூமாலை சாத்திப் புவிபுகழ்சோ ணாசலத்திற்குப்
பாமாலை சூட்டிப் பலகாலும் - நாமாலை
பண்ணா யிரம்பாடிப் பார்த்திருக்க நாயேற்குக்
கண்ணா யிரம்வேண்டும் காண்.



குரு நமசிவாயர் :

குகை நமசிவாயர் என்னும் சித்தப் புருஷரின் அருமைச் சீடர் இவர். திருவாரூர் தியாகராஜ சுவாமிகள் திருவீதி உலாவின்போது தேவதாசி ஒருத்தி கால் தடுக்கி வீழ்தல், கனக சபையின் கருப்புத்திரை தீப்பிடித்தல், கோயிலில் படைத்திட்ட திருவமுது தன் பசிக்கு அம்பிகையே கொண்டு வருதல் முதலிய நிகழ்ச்சிகளை இருந்த இடத்திநின்றே கண்ட மெய்ச்சித்தர்.

குருவாக்கைத் தாங்கிச் சென்றவர், சிதம்பரம் நடராசப் பெருமானிடம் ஈடுபட்டு மெய்யன்பு பூண்டொழுகி ஆனந்தமெய்தி, பல திருப்பணிகளையும் அற்புதச் சாதனைகளையும் விளைத்து, திருப்பெருந்துறையின்கண் இலிங்காகாரமானவர். இவர் அருளிய நூல்கள் 1. பரம ராசிய மாலை, 2. சிதம்பர வெண்பா, 3. அண்ணாமலை வெண்பா.

மனப் பாடம் செய்யத்தக்க பாடல்கள் :

### அண்ணாமலை வெண்பா

ஆதிநடம் ஆடுமலை; அன்றுஇருவர் தேடுமலை;
சோதிமதி ஆடரவம் சூடுமலை; - நீதி
தழைக்குமலை; ஞானத் தபோதனரை வாஎன்று
அழைக்கும்மலை அண்ணாமலை.

கண்டம் கரியமலை; கண்மூன்று உடையமலை;
அண்டர்எலாம் போற்றற்கு அரியமலை; – தொண்டருக்குத்
தோற்றுமலை; நாளும் தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை, அண்ணா மலை.

அஞ்செழுத்தாய் வேதமாய் ஆகமமாய் நின்றமலை;
விஞ்செழுத்தாய் ஒன்றாய் விளங்குமலை; - நெஞ்சகத்தே
நைந்தமலை; நாயேனைத் தன்அடியார் கூட்டத்தில்
வைத்தமலை அண்ணா மலை

அஞ்ஞானக் கங்குல் அகற்றுமலை; அன்பர்க்கு
மெய்ஞ்ஞானச் சோதி விளக்குமலை; - துஞ்ஞானச்
சந்தமலை; நாயேற்குத் தந்தைதாய் சற்குருவாய்
வந்தமலை அண்ணு மலை.

**ஈசானிய ஞான தேசிகர்:**

அருளே உருவாய் அமர்ந்த அற்புதச் செல்வர் இவர்; வெங்கொடுமைப் புலியோடு விளையாடும் புனிதர்; இராய வேலூரின்கண் சுமார் 220 ஆண்டுகட்கு முன், வேளாளர் குலத்தில் திருநீலகண்ட தேசிகருக்கு அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவர்; பிள்ளைத் திருநாமம், 'கந்தப்பன்' என்பது ஆகும்.

ஞானப் பெரு வாழ்விற்குத் தகுதியுடையவர் என்பதை அவரது இளமைப் பிராயமே எடுத்துக் காட்டுகிறது. ஆம்! ஓதாது உணரும் உயர் மேதையாய்-மகா புருஷராய் விளங்குகிறார். தந்தையார் தனக்குகந்த கன்னியைத் தேடிடும் வேளையில், இவர் 'ஞானக் கன்னி'யைத் தேடி தீர்த்த யாத்திரை செல்கிறார்.

ஐந்தொழிற்கும் வித்தாகி ஆனந்தத் தாண்டவமாடும் சிதம்பரத்தில் கந்தப்ப தேசிகருக்கு நடராச தரிசனத்தோடு குருதரிசனமும் கிடைக்கிறது. துறவியாகி சிவ ஞான போதநிலை எய்த நினைந்தவர், ஸ்ரீ மௌன சுவாமிகளிடம் ஞான உபதேசமும் பெற்று, பல தலங்களைத் தரிசித்து, சிக்கலுக்கடுத்த பொருள் வைத்த சேரியில் ஸ்ரீ உக்கந்த லிங்க ஞான தேசிகரிடம் சிலநாள் தங்கியிருந்து, பின் திருவண்ணாமலையை அடுத்த வேட்ட வலத்திற்கு அருகில் பாக்கத்து மலைக்குகையில் நிர்விகல்ப சமாதி கூடி இருக்கிறார். அங்கிருந்து வந்தவர், திருவண்ணாமலையின் தென்மேற்கிலுள்ள கோரக்க நாதர் குளக்கரைமீது மீண்டும் நிட்டை செய்கிறார்.



பிறகு ஒருநாள் ஸ்ரீ அண்ணாமலையார் காட்சி நல்கி, 'ஈசானிய திசைக்கு வருவாயாக!'- என்று அருளிய வண்ணமே, தேசிகரும் மனமுருகி அண்ணாமலையார்மீது தோத்திரப் பாமாலை பாடி வந்து, ஈசானிய திசையில் ஈசானிய தீர்த்தத்தின் தென்கரையில் ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் எழுந்தருளி புலி காவல் புரிய நிட்டையில் இருக்கிறார். அது கலைந்ததும், புலியைப் புன்னகையோடு தடவி கொடுத்து அனுப்பி வைக்கிறார்.

ஞானக்கட்டளை, அண்ணாமலையார் தோத்திரப் பாமாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய பிரபந்தங்களை இயற்றி, முத்துசாமி உடையார், புதுப்பாளையம் நாயகர், மாவட்டக் கலெக்டர் ஐடன், நாகை இராமலிங்க சுவாமிகள், சபாபதி சுவாமிகள், திருக்கோவிலூர் முத்துராமலிங்க ஞானதேசிகர் முதலிய அடியார்கள் உள்ளமெலாம் உவக்க பல அற்புதங்களைச் சாதித்த இத்தேசிகர், கலியுகம் 4930க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1751 (கி. பி. 1829) விரோதி ஆண்டு மார்கழித் திங்கள் 26ம் நாள் குருவாரம் மிருகசீருடம் கூடிய சுபதினத்தில் பரிபூரண தசையை அடைந்து விளங்கிய விளக்கமாக ஈசானிய மடாலயம் அமைந்திருக்கிறது. இன்று இம்மடத்து அதிபராக ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் அமர்ந்து புனித மிகு அறப்பணிகள் ஆற்றிவருவது குறிப்பிடத் தக்கது.

**சேஷாத்திரி சுவாமிகள்:**

நகரங்களில் சிறந்த காஞ்சிமாநகரில் அந்தணர் மரபின் பௌரகுத்ஸ குலத்தில் சேஷாத்திரி சோதிடர் குமாரர் புரோகிதம் வரதராச சோதிடருக்கும், புலமைமிக்க காமகோடி சாஸ்திரிகள் குமாரி மரகதாம்பிகைக்கும் கலி வருடம் 4970 சுக்கில வருடம் தைமாதம் அஸ்த நட்சத்திரம்

த்னுர் இலக்கினம் கூடிய நன்னாளில் உதித்த மகான் இவர் ஆவார். 'சேஷாத்திரி'-என்னும் நாமம் பூண்டவர்; சின்னஞ்சிறு பிராயத்திலேயே இவரது பெற்றோர், பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழலடிகளைச் சேர்ந்தமையின், சிறிய தந்தையார் இராமசாமி சோதிடர்-கல்யாணியம்பாள் தம்பதிகளின் ஆதரவில் வளர்ந்து வரலானார்.

## இளமையில் ஞான உதயம் :

இவர் இருபது வயதிற்குள்ளாகவே, கல்வி கேள்விகளில் வல்லவர் ஆகிறார். ஆம்! வேதம், காவியம், நாடகம் தர்க்கம், மீமாம்சை, சோதிடம், வேதாந்தம் முதலிய சாத்திரங்களில் தேர்ச்சிபெற உதவியது காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலிலுள்ள சாத்திரப் பாடசாலையே. இங்கு பெற்ற மனோ பக்குவமே அவரை ஞான உலகுக்கு ஈர்த்திட காரணமாய் அமைகிறது.

சோதி மலையாய் விளங்கும் அருணாசலத்தின் சித்திரப் படமொன்றைத் தாமாகவே எழுதி, வீட்டில் பூசித்துவரும் காமகோடி பீடத்தின்மீது வைத்து, விருப்போடு நாடோறும் ஆராதனை செய்து வருகிறார். இரவு நேரத்தில் காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சியம்பாள் கோயிலுள் சென்று 'ஸ்ரீமூக பஞ்ச சதீ' தோத்திர தியானம் செய்து பன்முறை வலம் வந்து பத்திப் பரவசர் ஆகிறார். அவருக்கு வயது இருபத்திரண்டு நெருங்குகிறது. கரவருடம் ஆடிமாதம் கடைசி வெள்ளிக்கிழமையில் காஞ்சீபுரம் சர்வதீர்த்தக் கரையில் உள்ள தீர்த்தேஸ்வரர் சந்நிதியில் கௌட சந்நியாசி அவதூதி பாலாஜி சுவாமிகளிடம் உபதேசம் பெற்று, பிறகு தமக்குத் திருமணமே வேண்டாம் என்று வெறுத்து வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறார்.



காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்து ஆஞ்சநேயர் ஆலயம், ஏகாம்பர நாதர் ஆலயத்து ஆயிரக்கால் மண்டபம் முதலிய இடங்களில் மெய்மறந்து அண்ணாமலை தியானத்தில் ஈடுபட்டு இருக்கிறார். சிறிய தந்தையார் வருந்தி அழைத்தும் வராத மன வுறுதியுடன் புறப்பட்டு, சேலம் மாவட்டம் காவேரி பாக்கத்து உறவினர் வீட்டில் தங்குகிறார். அப்போதும் அவர் மனம் சாந்தி பெறவில்லை. பிறகு இவர் திருப்பத்தூர் வந்து, ஜவ்வாது மலை வழியாய் திருவண்ணாமலைக்குக் கால்நடையாய் கடு வழியெல்லாம் கண்ணீர் உக நடந்து வருகிறார். அகச் சார்பு புறச் சார்புகளை அகற்றிய புனிதமாய்-ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் உயர்வுடையோராய்--திருவண்ணாமலையை அடைந்து அண்ணாமலையார் மீது ஆரூத காதலால் ஆடிக்களித்து தெருத்தெருவாய் திரிந்து வருகிறார்.

அப்பொழுதுதான் அவருக்கு ஒரு சோதனை நிகழ்கிறது...!

'பிளேக்'-என்னும் கொடுநோய் இத்தலத்தோரை வாட்டி வதைத்திட்ட காலம். ஊரில் எவரும் நுழைந்து உலாகக் கூடாது என அரசு கட்டளையிட்டிருந்த நேரம். அரசு கட்டளை மீறிய இப்பெரியாருக்கு அதிகாரிகள் ஒரு மாத சிறைதண்டனை கொடுத்திருக்கிறார்கள். அவரது ஆனந்த நிலையை அறிந்துப் பின் விடுவிக்கிறார்கள். இவ்வாறாக பந்தபாசமற்ற புண்ணியசீலராய் இருந்து அண்ணாமலையாரை எஞ்ஞான்றும் தொழுது பல அற்புதங்களை இயற்றிய இம்மாசித்தரை நாமும் நெஞ்சில் நினைவோம். அவர் சமாதி கூடிய இடமே இன்று, 'சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம்' ஆக மிளிர்கிறது.

## ஸ்ரீ ரமண மகரிஷிகள் :

இப்பெரியார் பாண்டிய நாட்டின் திருச்சுழியல் என்னும் தலத்தில் வக்கீல் சுந்தரம் ஐயர்-சதி அழகம்மைத்

தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வராய், கலி 4980 பிரமாதி சம்வத்சரம் மார்கழி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் தோன்றியவர். 'வேங்கட ராமன்'-என்னும் பிள்ளை நாமத்தோடு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, மதுரை ஆங்கில கலாசாலையில் படித்து ஸ்ரீ அருணாசலேசுவரர் நினைவு உந்த பதினேழாவது வயதில் தன் தந்தையின் தாளை நாடிச் செல்வதாய் சீட்டொன்று எழுதி வைத்துவிட்டு, வீட்டில் ஒருவருடனும் சொல்லிக் கொள்ளாமல் இரயிலேறி திருவண்ணாமலையில் துறவு பூண்ட பெருமகனார் இவர் ஆவார்.

இவரது சகோதர சகோதரிகள்-அண்ணன் நாகசாமி ஐயர்; தம்பி நாகசுந்தரம் ஐயர்; தங்கை அலர்மேலுமங்கை ஆவர்.

முதன்முதலில் திருவண்ணாமலையாரை துன்முகி வருடம் ஆவணி மாதம் கிருஷ்ண பட்சம் நவமி (1-9-1896)யில் இவர் தரிசித்து, பின் அங்கிருந்து இந்திர தீர்த்தக்கரை (அய்யங்குளம்)க்குச் சென்று, குடுமி, பூநூல் முதலியவைகளைக் களைந்தெறிந்து, பற்றற்ற நிலையில் ஆலயத்து ஆயிரக்கால் மண்டபத்தை அடைகிறார். இங்குள்ள நடராஜர் அபிடேக மேடை, பாதாள இலிங்கேசுவரர், சிவகங்கைக்குத் தென்பாலுள்ள இலுப்பை மரத்தடி, கோபுரங்கள், வாகன மண்டபம், வாழைத் தோட்டம், சுப்பிரமணியர் ஆலயம் முதலிய இடங்களில் சுமார் ஆறுமாத காலம் தவம் புரிகிறார். அருகேயுள்ள பவளக் குன்று குகையும், பிரவான கிரிநாதர் ஆலயத்துள் உள்ள காற்றுப்புகாத சிறிய அறையும், குகை நவசிவாயர் குகைகளும், மாமரக் குகையும், விருபாட்ச குகையும் அவருக்குப் பெரிதும் உதவின. பல வருடங்கள் அவரது தவம் நீடிக்கிறது.



## சீடர்கள்

காவிய கண்டர் கணபதி முனி, சிவப்பிரகாசம்பிள்ளை, ஹம்ப்ரீஸ் (ஐரோப்பியர்), மஸ்தான் சுவாமி, தாயாராகிய தேவி அழகம்மையார், தம்பி நாகசுந்தரம் ஐயர் (நிரஞ்சன சுவாமிகள் என்னும் சின்ன சுவாமி), பழனி சுவாமியார் முதலானோர் முக்கிய சீடர்களாய் விளங்கியவர்கள்.

இவரது தாயாராகிய தேவி அழகம்மையார் துந்துபி வருடம் வைகாசி மாதம் ஆறும் நாள் (19-5-1922) சுக்கிர வாரம் கிருஷ்ண பட்சம் நவமி சதயத்தில் எம்பெருமான் திருவடி நீழலை அடைகிறார். அவ்விடமே இலிங்கப் பிரதிட்டை செய்யப்பட்டு, 'மாத்ரு பூதேசுவரர்' என்று போற்றப்பட்டு இன்றும் அபிடேக ஆராதனையும், மகோற்சவமும், மார்கழி புனர்பூசத்தில் மகருஷி ரமண ஜெயந்தி, மங்களோற்சவமும் நடந்து வருகின்றன.

## ஸ்ரீரமணர் அருளியவை

1. அருணாசலதுதி பஞ்சம் (அட்சர மணமாலை, பஞ்சரத்தினம், அட்டகம், பதிகம், பஞ்சகம் அடக்கம்)

2. விவேக சூடாமணி (தட்சிணாமூர்த்தி தோத்திரம், திருக்குதிருசிய விவேகம், அத்தாம[illegible]கம், குருதுதி முதலிய அடக்கம்)

3. தேவி காலோத்தரம் (ஞானசார விசார படலம்)

4. உபதேச மொழிகள் (நானார், உபதேச உந்தியார், ஆன்ம வித்தை அடக்கம்)

5. ரமண கீதை (அருணாசல பஞ்சரத்தினம் அடக்கம்)

6. உபதேச சாரம் (தமிழ், தெலுங்கு, கேரள மொழிகளில் உள்ளது.)

## திருமதி தலையார்கான் திருப்பணி

ஸ்ரீரமணர் முதன்முதலில் திருவண்ணாமலைக்கு வந்து மக்கள் தொந்தரவிற்கு அஞ்சி ஆலயத்து ஆயிரக்கால் மண்டபத்து பாதாள இலிங்கச் சந்நிதியில் பலகாலம் தவம் நோற்று பூசித்த ஸ்ரீ பாதாள இலிங்கேசுவரர் கோயிலில், திருமதி பெரோசா தலையார்கான் அம்மையாராலும் திரு. ஜே. எச். தாராபூர் அவர்களாலும் திருப்பணி செய்யப்பட்டது. 14–5–1949ல் மேதகு ராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, 3—11—1968 கும்பாபிஷேகமும் இவ்வம்மையார், பெருமுயற்சியால் தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல்சிங், சர்தாரிணி அம்மையார், இந்து அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு ஏ. இராதா கிருஷ்ணன் முதலிய பெருமக்கள் முன்னிலையில் சிறப்புற நடத்தப்பெற்றது.

## ஸ்ரீ ரமண ஆசிரமம்

திருவண்ணாமலை நகரின் ஒரு கோடியில் – இரயில் நிலையத்திலிருந்து மூன்று கி. மீ. தூரத்தில்—செங்கம் செல்லும் சாலையில்-மயில்கள் ஆடும் இயற்கை எழிலுடன் மலையடிவாரத்தில் இவ்வாசிரமம் அமைந்திருக்கிறது. 1923ல் ஸ்ரீ ரமணரால் தொடங்கப்பட்ட இவ்வாசிரமம், இந்து மதத்தின் சிறப்பை உலகறியச்செய்திட ஆன்மீக தாகத்தை அனைவருக்கும் அளித்திட - பெரிதும் உதவியது எனலாம்.

பகவானின் மகாசமாதி, மகாநிருவாணம் அடைந்த இடம், தாயார் சமாதி, உணவு படைக்கும் மண்டபத்திலுள்ள மகான்களின் படங்கள், வேத பாடசாலை, பசு மடம், நந்தவனம், பகவான் வளர்த்த பசு, மான், காக்கை ஆகியவைகளின் சமாதி, நூல்நிலையம், வெளிநாட்டார் உவந்து தங்கும் விடுதிகள் யாவும் கண்டு இன்புறத்தக்கவையாகும்.



உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியர் சாமர்சட் மாகம் 1936ல் இவண் தங்கி, தமது உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறார்: இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய மேனாடுகளிலும் சீடர்கள் உண்டு. 14-4-1950ல் இவர் சோதியில் கலந்து விடுகிறார். இன்று இவ்வாசிரமம் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் அறப்பணிகள் ஆற்றி வருகிறது.

## ஜடிநி சண்முக யோகினி

பாண்டி நன்னாட்டைச் சேர்ந்த சிவகிரி என்னும் தலத்தில் தொண்டைமண்டல சைவ வேளாளர் குலத்தில் சண்முகம் என்னும் பெயருடன் பிரம்மசாரிணியாய் விளங்கிய அம்மையார். இவரது இருபத்து நான்காம் வயதில் ஒரு நாள் இரவு, அண்ணாமலையார் அடியாராக வந்து ஆட்கொண்ட நிலையில் கனவு கலைந்து நோக்க. தம் தலைமுடி சடைமுடியாக மாறி விடுகிறது. உள்ளம் உருக உடலம் சிலிர்ப்பெய்த, திருவண்ணாமலைக்கு வந்து முக்கரணங்களாலும் தெய்வப்பணி யாற்றி வந்தவர்.

சமயாசிரியர் நால்வருக்கும் குருபூசை நிகழ்த்தி, மலை வலம் வந்து, தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், அம்பாள் முதலிய சுவாமிகளுக்கு பாலாபிடேகம் செய்வித்து, தும்பை மாலை அணிவித்து, கற்பூர தீபம் காட்டுவித்து, சுமார் ஐம்பது வருடங்களாக தவம் செய்துவந்த பெருந்தவசியார் இவர் ஆவார். பருத்து நீண்ட ஒற்றைச் சடை

யும், பரந்த முகத்தில் ஒளிரும் கண்களும், ஆழ்ந்த நோக்கும், தூய நெஞ்சமும் இதை வெளிப்படுத்தும்.

### பாணி பத்திரர்

இம்மகான் அண்ணாமலையார் அருப்பெரும் மகிமைகளைக் கேட்டறிந்து, இத்தலத்தில் சுவாமியை வலம்வந்து பூசித்து, முத்தியடைந்தவர்.

### பத்திராசல சுவாமிகள்

சுமார் முப்பது வருடங்களுக்கு முன் இங்கு வாழ்ந்த பெரியார். எப்பொழுது பார்த்தாலும் அக்குள் இடுக்கில் ஒரு மூட்டை இருந்துகொண்டே இருக்கும். சதா தியானத்தில் ஆழ்ந்து இருப்பார். 'உண்பது எல்லாம் மலமே' என்னும் வள்ளலார் வாக்குக்கு இணங்க, பசித்த நேரத்தில் மலத்தையே உணவாக உட்கொள்ளுவாராம்.

கருத்த கம்பீரமான தோற்றமுடைய இப்பெரியார் சமாதி, திருவண்ணாமலை சேஷாத்திரி மடாலயம் அருகில் உள்ளது.

### ஈசுவர சுவாமிகள்

இப்பெரியார் சோழவளநாட்டின் திருக்கோயிலூருக்கு அடுத்த இறைவாச நல்லூர்ப் பதியில் அருணாசல தீட்சிதர்–சதி பாலாம்பிகை தம்பதிகள் பெற்ற தவப்பயனாய், கலி 4981 விக்ரம வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் தோன்றியவர் 'ஈசுவரன்' என்னும் நாமம் பூண்டு, திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்று, அருணகிரிப் பெருமானின் திருவருட் செயலுக்கு உள்ளம் மிகமகிழ்ந்து, கலி 5011 சாதாரண வருடம் மாசி சிவராத்திரியில் திருவண்ணாமலை வந்து, 'ஈசுவர சுவாமிகள்' என்னும் தவப்பெயர் பூண்டு ஒழுகி வந்தவர்; தமிழ், வடமொழி, ஆங்கில மொழிகளில் புலமை பெற்ற இவர், அடியாரின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிப்பார். 'மகாதேவா! மகாதேவா!' –என்று கணப்பொழுதும் இடைவிடாது தியானம் செய்பவர்,



பிட்சைக்கே இச்சித்த இவர் ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தின் மூல மண்டபத்தில் வாழ்ந்து, தினம் ஏழாம் பிரகார வலமும், கிரி வலமும் செய்வார். இவருடைய சமாதித்தானம், இங்குள்ள ஈசான்ய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது.

★

## திருவண்ணாமலை விளக்கம்

அண்ணாமலை என்றால் அண்ணா நாட்டு அண்ணாத்தூரைச் சேர்ந்த மலை என்பது பொருள். இம்மலையின் பெயரே காலக்கிரமத்தில் ஊரின் பெயராக மாறிவிட்டது. அன்று தொண்டை நாட்டோடு சேர்ந்திருந்தபோது, செங்குன்ற கோட்டத்துள் அடங்கிய அண்ணா நாட்டு அண்ணாத்தூர் என்றே இவ்வூர் வழங்கப்பட்டு வந்தது. அண்ணாத்தூரை அடுத்த ஏரி, 'அண்ணாத்து ஏரி' என்று அழைக்கப்பட்டு வந்தது.

பண்டைக் காலத்தில் இம்மலை நாட்டுக்கு சாசனங்களில் 'அண்ணா நாடு' என்றும், மலைக்கு 'திருவண்ணாதது' என்றும் வழங்கப்பட்டமை காணப்படுகிறது. திருவண்ணாதது என்றால் திருமாலாலும் பிரமாவாலும் அணுக முடியாத உயர்ந்த ஒன்று என்பது பொருள் ஆகும்.

இம்மலை பிற்காலத்தில் சோணாசலம், சோணாத்திரி என்றும், சாலிவாகன சகம் 1494ல் அருணகிரி அருணாசலம் என்றும் வரும் பெயர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன. அருணாசலம் என்றால் (அருண—அசலம்) பந்தமற்ற, கடனற்ற, செம்மையான, மௌன, ஒளி செய்கின்ற, சிவம் நிலைத்தது என்பது பொருள். ஆம்! எதைக் கண்ட மாத்திரத்தில் பந்தமும் கர்த்தவ்வியமும் இல்லையோ அந்த நிலைபெற்று ஒளிர்கின்ற மோனச் செம்பொருட் சிவத்தில் ஏனைய நினைப்புகள் அற்றுவீழ அவரை • நினைத்திருத்தலால் மாத்திரம் முத்தி என்பதையன்றோ அறிவுறுத்துகிறது!

### வரலாற்றுச் சிறப்பு

வரலாற்றுப் புகழும் சரித்திரச் சிறப்பும் கொண்ட திருவண்ணாமலை, 1911 வரை தென் ஆற்காடு மாவட்டத்துள்



சேர்ந்திருந்தது. பிறகே வடஆற்காடு மாவட்டத்தின் முக்கிய அங்கமாக—தாலுகா தலைநகராக—மிளர்ந்து வருகிறது. சென்னை, காஞ்சீபுரம், திருச்சி, சேலம், தஞ்சை மாவட்டங்களுக்கு இங்கு இருந்து செல்ல போக்குவரத்து வசதி உள்ளது. இங்கு இருந்து விழுப்புரம் 68 கி. மீ. ம், வேலூர் 95 கி. மீ. ம் (ரோடு வழி 82 கி. மீ.), சித்தூர் 107 கி. மீ. ம், கடலூர் 116 கி. மீ. ம் உள்ளன. இந்நகரப் பரப்பளவு சுமார் 12 சதுர கி. மீட்டர் ஆகும். இரண்டாந்தர நகரசபையாக விளங்கும் இந்நகரில் சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ்கிறார்கள்.

முற்காலச் சோழமன்னர்களால் ஆளப்பட்டு வந்த இந்நகரை, கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் ஹொய்சள வமிசத்தினர் தலைநகராகக் கொண்டனர். விஜய நகர அரசர், பாண்டியர், தஞ்சை நாயகர் பிரதிநிதிகள் ஆண்டு இருக்கின்றனர். கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் கருநாடக நவாபின் ஆளுகைக்கு உட்பட்டு, இராணுவத்தளமாகவும் விளங்கி, எண்ணற்ற இன்னல்களை ஏற்றுக்கொண்டது. கி. பி. 1767 முதல் கி. பி. 1782 வரை இங்கு ஆங்கிலேயருக்கும் ஐதர் அலிக்கும் கடும் போரும், கி. பி. 1791 வரை அடிக்கடி முற்றுகையிடலும் ஆகிய சோதனைகளும் நிகழ்ந்தன. முராரி ராயர், கிருஷ்ண ராயர், மிருத்திஸ் அல்லிகான், உல்லாகான், சூப்பிரேஸ், சாபினட், ஸ்டீபன் ஸ்மித் முதலிய மராட்டிய மகம்மதிய பிரெஞ்சு பரங்கிய படையெடுப்புக்களால் கோயிலும் மாளிகையும் பல்வேறு கொடுமைகட்கு ஆளாக்கப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்நகரை ஆங்கிலேயர் வசமாக்கிக் கொண்டனர்.

### அரசர்கள் ஆட்சி

இங்குள்ள கோயிலில் நூற்று இருபத்தைந்து கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதற் பராந்தகன் காலம்

(கி. பி. 907–953) முதல் சதாசிவராயர் காலம் (கி. பி. 1543-1565) வரையிலுள்ள கல்வெட்டுக்களைக்கொண்டு இக் கோயிலின் அருமை பெருமைகளை நன்குணரலாம். பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் இங்கு இல்லையாயினும், அவர்கள் காலத்தவர்களாகிய அப்பர், திருஞான சம்பந்தர். சுந்தரர் தம் திருப்பதிகங்களை சான்றாய் நிலவுகின்றன.

கோப்பரகேசரி வர்மன் (முதல் பராந்தகன்) கி. பி. 907-953, கன்னர தேவர் (கி. பி. 949–967), இராசகேசரி பன்மர் (இரண்டாம் பராந்தகன்) கி. பி. 956–973, வீரபாண்டியன் தலைகொண்ட கரிகாலன் (கி. பி. 956-969), முதல் இராசேந்திரன் (கி.பி. 1012-1044), முதல் இராசாதிராசன் (கி.பி, 1018 1054), இரண்டாம் இராசேந்திரன் (கி. பி. 1052-1064), முதற் குலோத்துங்கன் (கி. பி 1070–1120), இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146–1173), மூன்றாம் இராசராசன் (கி. பி. 1216–1241), கோப்பெருஞ்சிங்கன் (கி. பி. 1216-1246), மூன்றாம் இராசேந்திரன் (கி. பி. 1246-1279), முதல் விக்கிரம பாண்டியன் (கி. பி. 1268-1281), முதல் குலசேகரப் பாண்டியன் (கி. பி. 1268-1311), மூன்றாம் வீர வல்லாள தேவர் (கி. பி. 1291-1342), அரியண்ண உடையார் (இராசப் பிரதிநிதி) கி. பி. 1377, வீர விருப்பண்ண உடையார் (அரியண்ண உடையார் மகன்) கி. பி. 1379, இரண்டாம் தேவராயர் (கி. பி 1423–1446), வீர விஜயராயர் (கி. பி. 1422–1424), மல்லிகார்ச்சுனராயர் (கி 1447-1465), கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1509-1529), சதாசிவராயர் (கி. பி. 1543–1565) முதலிய பெரு அரசர்கள் காலத்தில் போற்றி வளர்த்த அறச் செயல்களை பெரிதும் பேசப்படுகின்றன.



## திருவிளக்கு எரிக்க தானம்

கோயிலில் திருவிளக்கெரிக்க தானம் செய்தல் மிகச் சிறந்த தானமாகும். அதுவும் தீபமாய் நின்ற திருவண்ணாமலைப் பெருமானுக்குச் செய்யும் திருவிளக்கு தானம் எத்தகு பலனுடையது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

சாதாரண விளக்கு, சந்தி விளக்கு, நந்தா விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு எனப் பலவகைப்பட்ட விளக்குகள் எரிக்க அரசமாதேவியர், சிற்றரசர் மனைவியர், படைத்தலைவர், அரசு உயர் அலுவலர், அரசியல் பணியாளர், தேவரடியார், பொதுமக்கள் எனப் பல திறத்தாரும் தானம் ஈந்திருக்கின்றனர்.

## பொன் வேய்ந்த தானம்

ஆறகளூர்-சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தது; வாண கோப்பாடியின் தலைநகரமாகவும் இலங்கியது. முதற் குலோத்துங்கன் ஆட்சியில் ஆறகளூர் உடைய இராசராச தேவன் இக்கோயில் கருவறை விமானத்தைப் பொன் வேய்ந்து, 'பொன் பரப்பினான வாண கோவரையன்' என்னும் பெயரைப் பெற்றான். கூடல் ஆளப் பிறந்தான் கடவராயன் மனைவியான பெண்ணரசியார் என்பாள், சுவாமிக்கு செம்பும் அரக்கும் உள் வைத்துப் பொன் பருமுத்து ஒன்று, முத்து பன்னிரண்டு, வெள்ளி, பொன் ஆகியவை கலந்த நகை ஒன்றும், திருஆலத்தித் தட்டு ஒன்றும் செய்து கொடுத்தாள்.

கோப்பெருஞ்சிங்கன் என்பான், கோயிலுக்குரிய தேவதான கிராமங்களையும், அன்று நாட்டுக்குரிய எல்லா வகை வரிகளையும் கோயிலுக்கே உரிமையாக்கியதோடன்றி, பவளத்தாலும் பொன்னாலும் செய்யப்பெற்ற

பதக்கமாலை ஒன்றையும் வழங்கினான். கோயில் தேவரடியாள் ஒருத்தி சுவாமி நகைக்காக பத்து கழஞ்சு பொன்னும் மூன்று நிலைக்குத்து ஒன்றும், திருநந்தா விளக்கு ஒன்றும் தானமாகக் கொடுத்தாள். வீரசேகர காடவராயன் என்னும் சிற்றரசன் நூற்று முப்பது எடையுள்ள ஏகவல்லி வடம் என்னும் நகையை வழங்கினான். குலோத்துங்கசோழ மலையகுலராசன் என்பான் சுவாமிக்கு முப்பத்தைந்து கழஞ்சு வடம் ஒன்றும், பத்தொன்பது கழஞ்சு பொன்னும், எண்பத்திரண்டு முத்துக்களும் கொண்ட தாழ்வடம் ஒன்றும் வழங்கினான். கோயில் திருமுற்றத்தில் இராசேந்திர சோழன் சாலையில் அடியார்க்கு உணவளிக்க ஒருவன் நாற்பது கழஞ்சு பொன் தானம் செய்திருக்கிறான். கிருஷ்ணதேவராயர் சுவாமிக்கு பதக்கமாலை வழங்கினார்.

## கிராம தேவதானம்

வாணகோவரையன் அண்ணு நாடு முழுவதையும் சுவாமிக்கு தேவதானமாக விட்டுத் தாரை வார்த்தான். இராசகம்பீர சேதிராயன், சோழன் ஏங்கப் பிறந்தான் நல்லூரைத் திருமடைப்பள்ளிப் புரமாக விட்டான். மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் சிங்கண்ண தண்ட நாயகன் (ஹொய்சளர் படைத் தலைவன்) என்பான் செய்யாற்றுக் கரையிலுள்ள மகிழம்பூண்டி கிராமத்தைத் தேவதானமாக விட்டான். சுவாமியின் திருமேற் பூச்சுக்கும் புழுகுக் காப்புக்கும் கலங்கரைப் பற்று என்னும் ஊரிலுள்ள வாழைத் தோட்டம், நன்செய், புன்செய் நிலங்கள் ஆகியவற்றைத் தேவரடியாள் ஒருத்தி தானமாக விட்டாள். மற்றும் சுவாமியின் பால் அபிடேகத்திற்காக வாண கோவரையர் 54 பசுக்களையும், பராக்கிரம பாண்டியர் 73 பசுக்களையும் 26 சேங்கன்றுகளையும் உதவியிருக்கிறார்கள்.



## மெய்க்கீர்த்திகளும் திருப்பணிகளும்

முதல் இராசேந்திரன், கோப்பெருஞ்சிங்கன், கிருஷ்ண தேவராயர் ஆகிய அரசர்களின் மெய்க்கீர்த்திகளும் இங்கே உள்ளன. ஆயிரக்கால் மண்டபம் கட்டி, திருமலை தேவி அம்மன் சமுத்திரம் (ஏரி) வெட்டி, பதினொரு நிலைக் கோபுரம் எடுத்து, ஏழாம் திருநாள் மண்டபம் கட்டி உதவிய கிருஷ்ண தேவ[illegible]ணிகளும் பேசப்படுகின்றன.

TAMIL NADU ARCHIVES LIBRARY 12842

## ஆராய்ச்சிக்குரிய அரிய கல்[illegible]டுகள்

இங்கு வசித்த சம்பந்[illegible]தாண்டார் என்பார் பற்றிய கல்வெட்டொன்று, (A. R. No. 499 of 1902) இக்கோயி[illegible] முதற் பிரகாரத்து வ[illegible] சுற்றுச் சுவரில் கா[illegible]படுகிறது. அது வருமாறு:

'...பொன்னுமான் திருவ[illegible]மான் சம்பந்தாண்டாரென்...பண்ணிக் குடு[illegible]சாவது... ஜீவ நாராயண சதுர்வேதி மங்கலத்து பட்டர்களுக்கு குடுத்தது-நாற்பார்க் கெல்லைக்குட்பட்ட என்தல்களில் என் மடப்புறமான மதியாலயன் பூண்டியில் உள்ள நிலதானம்...'

இக்கோயிலின் வல்லாள கோபுரத்து நுழை வாயிலின் இடப்புறத்தில் காணப்படும் அருணகிரிநாதர் பற்றிய கன்னட கல்வெட்டொன்று (A. R. No 569 of 1902) வருமாறு:

'அவுரா தேவி அவ்வைகள், ராயர் திருவுளப்படி கோயிலார்க்குக் கல்வெட்டினது......ஆண்டி எந்தலு, காலிங்கராயன் எந்தலு, களப்பாளன் எந்தலு, குன்தகார எந்தலு, பலதளி மண்ணை அருணகிரிநாதன் எந்தலு...'

மற்றும் மெய்கண்ட தேவர்கால ஆராய்ச்சிக்கு உதவும் ஒரு கல்வெட்டும் இங்கு உள்ளது குறிப்பிடத் தக்கது.

## சிற்ப நுட்பங்கள்

இக்கோயிலின் நான்கு வாயில்களிலும் நான்கு விண்ணை முட்டுகின்ற உயர்ந்த நான்கு உயர்நிலைச் சித்திர கோபுரங்களைக் காணலாம். 217 அடி உயரமும், அடி நிலை 135 அடி நீளமும், 98 அடி அகலமும் கொண்ட பதினொரு நிலையுள்ள கிழக்கு இராச கோபுரம் கிருஷ்ண தேவராயரால் தொடங்கப்பெற்று, தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கரால் கட்டி முடிக்கப் பெற்றதாகக் கூறுவர். எடுப்புமிக்க நாட்டிய மங்கையின் எழிலார்ந்த உருவமும், பரத சாத்திரத்திலுள்ள தாண்டவ இலட்சணம் என்னும் நாட்டிய நிலைகள் நூற்றெட்டையும் விளக்கும் சிற்பங்களும், இக்கோபுர வாயிலில் கண்டு இன்புறத் தக்கனவாகும்.

மற்றும் மேற்கில் உள்ளது பேய்க் கோபுரம் (கி. பி. 1516) என்றும், தெற்கில் இருப்பது திருமஞ்சனக் கோபுரம் என்றும், வடக்கில் இருப்பது அம்மணியம்மன் கோபுரம் என்றும் வழங்கப்பெறும். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த அம்மணி அம்மாள் என்னும் யோகினி, அண்ணாமலையார் பக்தியில் ஈடுபட்டு தவம் செய்து சிலத்தோடு வாழ்ந்தவர். இவரால் கட்டப்பட்டதே 'அம்மணி அம்மாள் கோபுரம்' ஆகும்.

மேலும், கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் ஆண்ட வல்லாள மகாராசன் கட்டிய வல்லாள கோபுர (கி. பி. 1340)மும், கிளிக்கோபுர (கி. பி. 1063)மும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கவை ஆகும்.



## நகரத்தார் திருப்பணி

நாட்டுக் கோட்டை நகரத்துச் செல்வர்கள் முன் வந்து, சுமார் முப்பத்தைந்து இலட்ச ரூபாய் செலவில் இக்கோயிலைப் புதுப்பித்தும், திருப்பணிகள் ஆற்றியும், திருவாபரங்களும் வாகனங்களும் செய்தும் வந்திருக்கிறார்கள். 12-6-1936, 4-6-1944 ஆகிய தேதிகளில் மகா கும்பாபிடேகங்கள் செய்யப்பெற்றிருக்கின்றன.

## திருப்பனந்தாள் தருமங்கள்

மாணிக்கவாசகப் பெருந்தகையார் இத்தலத்தில் உவந்து வீற்றிருந்து அருளிய 'திருவெம்பாவை', பெருமக்கள் நெஞ்சில் என்றும் இடம் பெறுவது ஆகும். அதனைத் திருவுளம் கொண்டு திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் சுவாமிகள் 'திருவெம்பாவை' முழுதும் சலவைக் கற்களில் பொறித்து அம்மன் சந்நிதியில் அழகுற பதித்திருக்கிறார்கள். மற்றும் 'சிவ சிவ' ஒளி விளக்கும், காலைமாலை தேவகானம் இசைத்திட ஒலிபெருக்கி அமைப்பும் பிறவும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

## பிற திருப்பணிகள்

தேவாலய அறங்காவலராய் இருந்த திரு ஆர். நாராயணசாமி ரெட்டியார், ஸ்ரீ கம்பத்து இளையனார் சந்நிதியைப் புதுப்பித்து, ஆறுபடை வீடுகளையும், இத்தலத்தில் நிகழ்த்திய முருகப் பெருமானின் அற்புதச் செயல்களையும் வண்ணச் சித்திரத்தில் அடக்கி, 'காட்சி நல் இன்பம்' தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சமயப் பேரவை நிகழ்ச்சிக்கென சத்திவிலாச மண்டபம் சீர்படுத்திட மணலி திரு இலட்சுமணசாமி முதலியார் அறநிலையம் நிதி உதவியிருக்கிறது.

# சமயச் சிறப்பியல்

## திருஞான சம்பந்தர்

நமது நாட்டில் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, பாரெல்லாம் பக்தி மணம் பரவச் செய்தவர்கள் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வர் ஆவர். அவர்கள் நெஞ்சகத்தே கிளர்ந்தெழுந்த தேமணக்கும் பாக்களைப் பரவசமாய்ப் பாடி, திருவடி பட்டுப் புனிதம் பெற்றப் பதிகளே, 'பாடல் பெற்ற தலங்கள்' என்று போற்றப்பெறுகின்றன. அவ்வகையில் பாடல்பெற்ற தலங்களுள், திருவண்ணாமலைக்குத் தனிச் சிறப்பு உண்டு எனில் அது மிகையாகாது.

திருஞான சம்பந்தர் எத்துணையோ தலங்களுக்குச் சென்று வழிபட்டவர்; தாம் காணும் தலப் பெருமைகளைக் குறித்து, அந்தத் திருப்பதிகத்திலேயே போற்றிப் புகழ்ந்து பாடியவர். ஆனால் இவர் எந்தை ஈசரை-திருவண்ணாமலையாரை என்ஞான்றும் மறந்திலர். இப்பெருமானை நினைந்து நினைந்து இன்புறும் பெற்றிமை உடையவராகவே திகழ்ந்திருக்கிறார். இவர் எந்தத் திருப்பதிகம் பாடினாலும் அந்தத் திருப்பதிகத்தில் இப்பெருமானை மறவாமல் நினைவு கூர்ந்து குறிப்பிட்டு பாடியருளுவதினின்று இதனை நன்குணரலாம்.

திருஞான சம்பந்தரின் திருப்பதிகங்களில் ஒருசிலவற்றைத் தவிர, பெரும்பாலானவற்றில் எட்டாம் பாட்டில் இராவணன் வரலாற்றையும், ஒன்பதாம் பாட்டில் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாற்றையும் பத்தாம் பாட்டில் சமணர் சாக்கியர் பற்றிய குறிப்புக்களையும் உள் அமைத்துப் பாடியருளி யிருக்கிறார்.

இவ்வாறு ஒவ்வொரு தலத்தின் திருப்பதிகத்திலும் ஒன்பதாம் பாடலில் அடிமுடிதேடிய வரலாற்றைக் குறிப்



பிட்டு திருவண்ணாமலையை மறவாமல் போற்றி இருத்தலின், இவ்வரலாற்றுக்குரிய தலமாம் திருவண்ணாமலையின் தனிச் சிறப்பினை உய்த்துணரலாம் அன்றோ! இதனை வலியுறுத்தி சிவப்பிரகாச சுவாமிகள்,

'கூம்புறு கரமும் மலர்ந்திடு முகமும்
கொண்டு, நின்றனை வலம்புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி மேனி
மேற்படிற் பவம் பொடிபடுமே!

பூம்பொழிற் புகலிக் கிறைவன்நா விலம்சேர்
புண்ணியத் தலங்களி னடைந்து
தாம்புனை பதிகந் தொறும் புகழ்சோண
சைலனே! கைலை நாயகனே!'

—என்று பாடிப் புகழ்ந்திருக்கிறார்.

திருஞான சம்பந்தர் தலயாத்திரை மேற்கொண்டு வருகையில் திருவண்ணாமலையை அடைந்த நிலையை சேக்கிழார் பெருமான் அழகுறக் குறிப்பிட்டு,

'அங்கண் அணைவார் பணிந்தெழுந்து
போற்றிசெய்து அம்மலைமீது
தங்கு விருப்பில் வீற்றிருந்தார் தான்தா மரைகள்
தம்முடிமேல்
பொங்கும் ஆர்வத் தொடும் புனைந்து
புளகம் அலர்ந்த திருமேனி
எங்கும் ஆகிக் கண்பொழியும் இன்ப அருவி
பெருக்கினர்'

என்று பாடுகிறார். செடி கொடி மரங்கள் செறிந்தும், அருவிகள் இழிந்தோடியும், இனிமை எழிலும் புனித அமைதியும் நிறைந்துமுள்ள இயற்கைச் சூழ்நிலை இவரது

உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விடுகின்றன. இந்நிலையில் இவர் 'மலைமீது தங்கு விருப்பில் வீற்றிருந்தார்' என்று பேசும் சேக்கிழார், இம்மலையைப் பெரிதும் பாராட்டுவதைக் காண்கிறோம். 'காதலால் அத்திருமலையில் சில நாள் வைகி...'என்று திருவண்ணாமலையைத் திருமலை என்றே குறிப்பிட்டு, தெய்விக நிலையைப் புலப்படுத்துகிறார்.

எம்பெருமானின் கருணை வெள்ளத்தில் திளைத்து மூழ்கி இன்புற்றவர் , இயற்கையின் எழில் வெள்ளத்தையும் காண்கிறார். ஆம்! பெருமிதம் மிகுந்த பீடு நடையோடு–அருவிநீர் ஓட்டத்தோடு–பாட்டும் பிறக்கிறது!

மனப்பாடம் செய்யத்தக்க திருப்பாடல்கள்:

பண்: நட்ட பாடை (முதல் திருமுறை)

'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன; அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவணம் அறுமே.

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை அதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே!

பண்: தக்கேசி (முதல் திருமுறை)

பூவார் மலர்கொண் டடியார்தொழுவார்; புகழ்வார்
வானோர்கள்;
மூவார் புரங்கள் எரித்தஅன்று மூவர்க்கருள் செய்தார்;
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையும்சாரல் அண்ணாமலையாரே!



அல்லாப்பரவ மியங்குஞ்சாரல் அண்ணாமலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லான் மலிந்தபாடலான பத்து மிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர் வணங்க மன்னிவாழ்வாரே!

## திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநேரிசை (4ம் திருமுறை)

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா! மிக்க
சோதியே! துளங்கும் எண்தோள் சுடர்மழுப்
படையி னானே!
ஆதியே! அமரர்கோவே! அணியணா மலையு ளானே!
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவிலேனே!

இரக்கமொன் றியாது மில்லாக் காலனைக் கடந்த
எம்மான்
உரத்தினால் வரையை யூக்க ஒருவிரல் நுதியினாலே
அரக்கனை நெரித்த அண்ணா மலையுளாய்! அமரர் ஏறே!
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பிலேனே!

திருக்குறுந்தொகை (5ம் திருமுறை)

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
இட்ட னைஇகழ்ந் தார்புர மூன்றெய்த
அட்ட னைஅடி யேன்மறந் துய்வனோ!

அரக்க னையல றவ்விரல் ஊன்றிய
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனோ!

பட்டி ஏறுகந் தேறிப் பலவிலம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்திஅண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை; கேடில்லை காண்மினே!

# இலிங்கப் புராணம் (பொது)

## திருக்குறுந் தொகை (5ம் திருமுறை)

கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்;
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்;
அண்ட மூர்த்தி அழல்நிற வண்ணனைக்
கொண்டிக் காணலுற் றாரங் கிருவரே!

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்;
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்;
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே!

## திருத்தாண்டகம் (6ம் திருமுறை)

உண்ணா வருநஞ்ச முண்டான் தான்காண்;
ஊழித்தீ யன்னான்காண்; உகப்பவர் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்;
பயின்றநால் வேதத்தின் பண்பி னான்காண்;
அண்ணா மலையான்காண்; அடியார் ஈட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்;
கண்ணாரக் காண்பார்க் கோர்காட்சி யான்காண்;
காளத்தியான் அவனென் கண்ணுளானே!

மூரி முழங்கொலிநீர் ஆனான் கண்டாய்;
முத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்;
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்;
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்;
ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்;
அண்ணா மலையுறை எம்அண்ணல் கண்டாய்;
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்;
மறைகாட் டுறையும் மணாளன் தானே!



# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அப்பர், திருஞானசம்பந்தர் ஆகியவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவராகிய இவர், இப்பெருமானை அவசியம் பாமாலை சூட்டி மகிழ்ந்திருத்தல் வேண்டும். ஆனால் எவ்வாறோ இவரது திருவண்ணாமலைத் திருப்பதிகம் கிடைக்கப் பெற்றில; எனினும் வேறொரு திருப்பதிகத்துள், 'ஆனைக்காவில் அரனே! பரனே! அண்ணாமலையானே!'-என்று நைந்துருகிப் பாடியிருத்தலினின்று, இப்பெருமானை இவர் உளமாற வந்தித்திருந்துப் போற்றிப் பரவி யிருத்தல் வேண்டும் என்பதை உய்த்துணரலாம் அன்றோ!

தேனைக் காவல்கொண்டு விண்ட கொன்றைச் செழுந்
தாராய்
வானைக் காவல்கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக்காவில் அரனே பரனே அண்ணாமலையானே
ஊனைக்காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்
வாரே.

# மாணிக்கவாசக சுவாமிகள்

## (திருவெம்பாவை)

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி
போய்

வீதிவாய் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்; கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்!

அண்ணு மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றுற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய்!

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்;
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்;
போற்றிமால் நான்முகனும் காணுத புண்டரிகம்;
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்;
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!

### திருவம்மானை

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்ருனைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணும்பெருந் துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணு மலையானைப் பாடுதும்காண் அம்மானுய்!

சேக்கிழாரின் பெரிய புராணமும், கச்சியப்பரின் கந்தப் புராணமும், மறைஞான சம்பந்தரின் அருணகிரிப் புராணமும், சைவ எல்லப்ப நாவலரின் அருணசலப் புராணமும், அந்தாதியும் கலம்பகமும், துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் சோணசைலமாலையும், பதினொன்ரும் திருமுறையும் பிறவும் இப்பெருமான் புகழ்பாடும் பெற்றிமை உடையன ஆகும்.



## இரட்டையர் பாடல்

சோழநாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் முதுசூரியர் இளஞ்சூரியர் என்னும் இரு புலவர்கள் வாழ்ந்து வந்தனர். சுமார் கி. பி. 16ம் நூற்ருண்டினர். மைத்துனர் கேண்மையுடைய இரட்டையர்களில் ஒருவர் குருடர்; மற்ருெருவர் முடவர். இந்நிலையில் இவர்களில் முடவர், குருடர் தோளில் உட்கார்ந்துகொண்டு வழிகாட்டிட, குருடர் முடவரைச் சுமந்துச் செல்வர். இவ்வாறு தமிழகத்துள் உள்ள திருக்கோயில்களில் தரிசித்துப் பெருவள்ளல்களிடமிருந்து பரிசில்கள் பெற்று வந்தார்கள்.

ஒருசமயம் திருவண்ணுமலையில் இருந்த சம்பந்தாண்டான் என்னும் புலவனிடம் இரட்டையர்கள் வந்தார்கள். அவனே உட்கார்ந்துகொண்டு முகச்சவரம் செய்துகொண்டிருந்த சமயம்: 'இதுதான் சமயம்' என்று அவர்களை அவமானப் படுத்தி விரட்டிட நினைக்கிருன் சம்பந்தாண்டான். 'ஓகோ...நீங்கள் புலவர்களோ! அப்படியானுல், 'மண்' என்று தொடங்கி, 'மலுக்கு' என்று முடித்து ஒரு வெண்பா பாடுங்கள்!' அவ்வளவுதான்! சம்பந்தாண்டானின் அறியாமையால் ஏற்பட்ட ஆணவத்தை எண்ணி நகைத்ததோடு, உலகமும் நகைத்திட வேண்டும் என்று கொண்டு, வழக்கம்போலவே முடவர் முன் இரண்டடியைப் பாடுகிருர்; பின் இரண்டடியைக் குருடர் பாடுகிருர். பாடல் இதுதான்:

'மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுதலைச் சவரம் பண்ணுவதேன்?—மின்னின்
இளைத்த மடவார் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டாமலுக்கு'

பொருள்: நிலைபெற்ற—தெய்வத் திருவண்ணுமலையில் வாழும் சம்பந்தாண்டானுக்கு தலைச்சவரம் செய்வது எதற்குத்

தெரியுமோ? மின்னனைய மென்னிடைப் பெண்கள், இவன் குடுமியைப் பற்றி வளைத்திழுத்துத் தலையில் குட்டாமல் இருத்தற்காகவே ஆகும்.

அருணாசலப் புராணத்துள் மனப்பாடம் செய்யத்தக்க பாடல்கள் வருமாறு:

### யானை திறை கொண்ட விநாயகர்

மதமூன்றும் ஆறாக வருங்களிற்று
முகத்தானை; மனத்தி லேதான்
பதமூன்றும் அருந்தவர்க்குப் பதமூன்றும்
கடந்தபதம் பாலிப்பானை;

விதமூன்று புரம்கடிந்தார் அளித்தருளும்
ஒருமுதலை; வேரோ டேசம்
சிதமூன்று பிறப்பொழிக்கும் ஆனைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம்.

### அண்ணாமலைப் பெருமான்

ஒருமானைக் கரத்தினில் வைத்(து); ஒருமானைச்
சிரத்தினில் வைத்(து); உலகம் ஏழும்
தருமானை இடத்தினில் வைத்(து); அருள்வானைப்
பவளநெடும் சயிலம்போல

வருமானைமுகத்தானை அளித்தானைப்
பெருமானை மகிழவேறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவிதீர்ப்பாம்.

### உண்ணாமுலையம்மன்

காரொழுகும் குழலாளை; கருணைவழிந்(து)
ஒழுகும்இரு கடைக்கண்ணாளை;
மூரல்இள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகு முகத்தினாளை;



வாரொழுகும் தனத்தாளை; வடிவொழுகித்
தெரியாத மருங்குலாளை;
சீரொழுகும் பதத்தாளை; அருணை உண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

### முருகப்பெருமான்

'கொந்தாரு மலர்ச்சோலை அருணைநெடுங்
கோபுரத்தில் குமர வேளை,
வந்தாரை வாழ்விக்க வடவீதி
தனில் உறையும் மயிலினானைக்

கந்தாருங் கடக்களிற்று மகவாற்குத்
தருவிழலும் கனக நாடும்
தந்தானை அலர்கடப்பந் தாரானைப் பணிபவர்தான்
தலைமேற் கொள்வாம்!'

### கார்த்திகை தீபப் பலன்

'கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்;
வாய்த்தஅந்தச் சுடர்காணில் பசிப்பிணிஇல்
லாது உலகில் மன்னி வாழ்வார்;

பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிறும்; இதுபணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம்!' என்றார்!

### மலைவல மகிமை

'செம்மலை உருவா நம்மைத்
தினம்வலம் புரிந்தோர், வேதன்
தம்மிலும் அதிகம்; மாயோன்
தனக்குமேல் அதிகம்; பார்க்கில்

உம்மினும் அதிகர்; இந்த
உமையினும் அதிகர்; மைந்தா!
எம்மிலும் அதிகம்!' என்றான்
எவர்க்கு மேல் அதிகம் ஆனேன்.

### அண்ணாமலையார் பெருமை

'அண்ணாமலை உடையாய்! மழ
விடையாய்! அணி சடைசேர்
தண்ணாமலை உடையாய்! எமை
உடையாய்! நுதல் தழுவும்
கண்ணாமலை உடையாய்! வினை
கடவார்அறி வறிதற்(கு)
ஒண்ணாமலை உடையாய்! உமை
உண்ணாமுலை தலைவா!'

### மங்கல வாழ்த்து

'அஞ்செழுத்தும் வாழிவாழி!
அருணைவாழி! அருணையான்
கஞ்ச முற்ற சரணம்வாழி!
கருணைவாழி! கருணைபோல்
மஞ்சுபெற்ற வானம்வாழி!
வையம்வாழி! வையமேல்
தஞ்சமுற்ற நீறும்வாழி!
சைவம் வாழி! வாழியே!'

ஞானம் வாழி! நன்மைவாழி!
நடராச நீதிசேர்
தானம் வாழி! தருமம் வாழி!
சரதவேத மாகமம்
கானம்வாழி! கல்வி வாழி!
கற்றறிந்த கேள்விஅன்
பானபேர்கள் வாழி! ஈசன்
அடியர்வாழி! வாழியே!'

# தீபச் சிறப்பியல்

தெய்விகம் நிறைந்தத் திருமலையாகிய இத்திருவண்ணாமலை கடல்மட்டத்தினின்று 2668 அடி உயரமுள்ளது. சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு விளங்கிய தலம் என்று இலக்கியங்கள் ஏத்தும் சிறப்புடையது. இம்மலையின் உச்சியில் முப்பது அடி சதுரமுள்ள பாறையில் திருப்பாதங்கள் காணப்படுகின்றன. அவையே ஸ்ரீ அண்ணாமலையார் ஸ்ரீ உண்ணாமுலை யம்மை திருப்பாதங்கள் என்பது பக்தர் பெருமக்கள் நம்பிக்கை ஆகும். எட்டுமைல் சுற்றளவுள்ள இம்மலையின் அடிவாரத்தில், கிரிவலம் வருவோருக்காக நன்கு செப்பனிடப்பட்ட பாதை போடப்பட்டு இருக்கிறது. ஆண்டுக்கு இருமுறையாக, கார்த்திகை, தை ஆகிய மாதங்களில் ஸ்ரீ அண்ணாமலையார் கிரிவலம் எழுந்தருள்வார்.

மலையைச் சுற்றி எண்திசைகளிலும் அட்ட இலிங்கங்களும் அட்ட நந்திகளும் மற்றும் நானூற்றிற்கும் மேற்பட்ட இலிங்கங்களும், அருணாசலேசர் ஆலயத்துள் சிவகங்கை, பிரமதீர்த்தம், சந்நிதியில் சக்கரதீர்த்தம் (ஐயன்குளம்), அக்கினி தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பாலி தீர்த்தம் ஆகியவை வரிசையாய் அமைந்திருக்கின்றன. இதற்கப்பால் பலாக்கொத்து தீர்த்தம், இமய தீர்த்தம், தென்புரம் அக்த்திய தீர்த்தம், சோண தீர்த்தம் (தலநதி), நிருதி தீர்த்தம், உண்ணாமுலையம்மன் தீர்த்தம், வாயு தீர்த்தம், குபேர தீர்த்தம், வடக்கிலுள்ள வசிட்ட தீர்த்தம் உள்ளிட்ட முன்னூற்று அறுபதிற்கும் மேற்பட்ட தீர்த்தங்களும், சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம், திலோத்தமைக்கு அபயம் தந்த வேடப்பர் ஆலயம், திரிமூர்த்தி தரிசனம், கௌதமர் ஆசிரமம், சூரிய இலிங்கம், பாடல்பெற்ற அணி அண்ணாமலை ஆலயம், மாணிக்கவாசகர் ஆலயம், துர்க்கை ஆலயம், பவளக்குன்று ஆலயம், பஞ்சமுக தரிசனம், பச்சையம்மன் ஆல

யம், அறுபத்து மூவர் மடம், சாது சத்திரம், மெ. க. அன்ன சத்திரம், ஈசானிய ஞான தேசிகாசிரமம் ஆகிய இன்ன பிறவும், மலையின் மத்திய பாகத்தில் குகை நமசிவாயர் ஆசிரமம், கந்த ஆசிரமம். விருப்பாட்சி குகை, மாமரத்து குகை, சடைச்சாமி குகை, அருட்பால் குகை முதலியனவும் கூடி மலையின் மாண்பையும் தெய்விகச் சூழலையும் ஏற்படுத்துகின்றன.

இத்தகு தெய்வத் திருமலையின் உச்சியில் கார்த்திகை மாதம் கார்த்திகை தினம் சோதி சொருப அருட்சோதி தரிசனம் காட்டப்பெறும். ஆறு அடி உயரம் நான்கு அடி அகலமுள்ள சுமார் பதினைந்து ஆயிரம் மதிப்புள்ள முப்பது டின் நெய் கொள்ளும் செப்புக் கொப்பரை யொன்றை மலையுச்சியிலுள்ள பாறையில் பதித்து, நெய் துணி கற்பூரம் ஆகியவைகளை மட்பாத்திரத்தில் கொண்டு சாரி சாரியாகச் செல்லும் சிப்பந்திகளும், தீபமேற்றிட 'துரு துரு' என்று நடக்கும் அவர்களின் விரைவு நடைகளும்...கடல் போன்ற பக்தர்களின் ஆவலை மேலும் மிகுவிக்கும். தீபத்திற்கு வேண்டிய நெய் முதலியவைகளைத் தேவஸ்தான கண்காணிப்பில் சுத்தமாகச் சேமித்து வைத்து இருப்பர். பிரார்த்தனையாளர்களும் பக்த கோடிகளும் உரிய தொகை செலுத்தி, சிப்பந்திகள் மூலம் தங்கள் பங்கைப் பாதுகாப்போடு சேர்ப்பிப்பார்கள். அவர்கள் உண்மையில் நித்திய சூரியர்கள் அன்றோ!

கார்த்திகை மாதம் பௌர்ணமி கூடிய உக்கிரமான கிருத்திகை அதிகாலை. பரணி தீபத்தால் சுயம்பு இலிங்கத்தை ஆராதிப்பர். மாலைச் சூரியன் மலைவாயில் விழும் நேரம்; பிரதோச சமயம். ஆலயத்துள் அலைமோதும் பக்தர்களின் கூட்டம் சொல்லிமுடியாது. நாதஸ்வர ஓசையும், பேண்டு வாத்திய இன்னிசையும், பஜனை கோஷ்டிகளின் பாடலும், 'அண்ணுமலைக்கு அரோகரா' என்ற கோஷமும்



வானை முட்டும். அத்தருணம் எத்தகு கடின சித்தமுடையாரையும் மெய்சிலிர்க்க வைத்துவிடும். இவ்வுன்னதமான வேளையிலே கிளிக்கோபுரத்தின் உட்புறமுள்ள பதினாறுகால் தீபதரிசன காட்சி மண்டபத்திலே பஞ்சமூர்த்திகள் பெருமிதத்தோடு எழுந்தருளி மலையை நோக்கி நிற்க—அதே சமயம் ஏக காலத்தில் கோயிலிலும் மலைமீதும் நடைபெறும் தீப தரிசனக் காட்சி, காண்டற்கரிய கண்கொள்ளாக் காட்சியே ஆகும். ஆஹா...! கோயிலின் எல்லாச் சந்நிதிகளும், கோபுர விமான உச்சிகளும் ஒரே ஒளிமயம்தான்! அவ்வளவு ஏன்? திருவண்ணுமலைத் திருநகரமெங்கும் ஒளிவெள்ளத்தில் மிதக்கும்.

'இறைவன் பேரொளிப் பிழம்பாய்ப் பிறங்கும் பெற்றிமை உடையவன்'-என்பதை அறிவுறுத்த எழுந்ததே இத் தீபத் திருவிழா ஆகும். இதனை வலியுறுத்தியே மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தில் அருளிச் செய்த திருவெம்பாவையில், 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி'-என்று பாடிப் பரவுகிறுர் என்று கொள்ளலாம். மேலும் இப் பெருமான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய் விளங்குபவன். ஒளிகட்கெல்லாம் ஓர் ஒப்புயர்வற்றப் பேரொளியாய்த் திகழ்பவன். சூரியர், சந்திரர், அக்கினி என்னும் ஒளி பொருள்கள் மூன்றையும் மூன்று கண்களாகக் கொண்டவன். இச்செம்மேனிப் பெம்மானைப் பேசவந்த மாணிக்கவாசகர்,

'சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண்நீற்றாய்!
பங்கயத் தயனும்மால் அறியா

நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர் குருந்தம்மே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே!'

—என்று திருவாசகத்துள் உருகிப் பாடுகிறார், ஆம்! விளக்கம் எய்திட விளக்கு வேண்டும்தானே! அதனால் இறைவனை,

'ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!'

—என்று திருவிசைப்பா இசைத்து நிற்கிறது.

பகலவனின் பட்டொளி பாரெங்கும் வீசிய காலத்தும் திருவிளக்கு வைத்து வழிபடல் நமது மரபு வழிபாட்டுக்கு இன்றியமையாத அங்கமாக—மங்களப்பொருளாக — விளங்குவது தீபவிளக்கு அல்லவோ! இற்றைக்கு திருவிளக்கு வழிபாடு நிகழ்த்துதலும், மங்களக் காலங்களில் விளக்கேற்றுதலும், திருமண நேரத்தில் விளக்குகளை வைத்து மணமக்கள் வலம் வருதலும் கண்கூடு. இதனால் இறைவன் தீபத்திரு விளக்கில் ஒளியாய் ஒளிர்ந்து மிளிர்கிறான் என்பதை அறியலாம். அருணகிரிநாதரும்,

'தீப மங்கள ஜோதி நமோ நம;'—என்றும்,
'தீப விளக்கம் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே!'

—என்றும் துதித்து வேண்டுகிறார்.

கொடுமையின் நிலைகளாய் நின்றவனைக் கொன்று, வேத்திரகீய நகருக்கு மீள்கிறான் வீமன். அத்தருணம் அந்தணர்கள், நெய் விளக்கேற்றி வீமனை வரவேற்ற காட்சியை,

'வாசமாமணி விளக்கெடுப்ப இவன்
வந்துதாம் உறையும் மனை புகுந்து ...'

—என்று பாரதம் பரக்கப் பேசுகிறது. 'விண் கடந்த சோதியாய்' விளங்கும் இறைவனை, 'தோய்ந்தும் பொருள்



அனைத்தும் தோயாது நின்ற சுடரே' —என்று கம்பர் விளக்குகிறார். இருளும் மருளும் மாய்ந்த அருள் ஒளியை,

'பொருளாகக் கண்டபொருள் எவைக்குமுதற்
பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந்தேனாகி
அருளானோர்க்கு அகம்புறம் என்றுன்னாத
பூரண ஆனந்தமாகி
இருள்தீர விளங்குபொருளியாது? அந்தப்
பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்!'

இப்பொருளை ஏத்தி வணங்கிய தூப்புள் வேதாந்த தேசிகனும், 'ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்'... என்று பரிந்து பாடிப் போற்றுகிறார்.

பயிர் வாட தாம் வாடிய பெருமான் இராமலிங்க வள்ளலார். அவர் அம்பிகையைத் தொழுது துதிக்கையில்,

'கோவாத முத்தமே! குறையாத மதியமே!
கோடாத மணிவிளக்கே!'

—என்று உருகி அழைக்கிறார். அம்மட்டோ! அவர் மனமாகிய தோழியை விளிக்கிறார்: தோழீ! இதுவோ அருளாளர் வருகின்ற தருணம்; கோடிக்கணக்கில் விளக்கேற்றிடுவாயாக! பசுநெய் விட்டே விளக்குகளை ஏற்றுவாயாக! வேறு நெய் என்றால் எம்பெருமான் திருமேனிக்கு மாசு நேர்ந்தாலும் நேருமே! 'இது காலை நேரமாயிற்றே! இருள்தான் இல்லையே! விளக்கு வேறு வேண்டுமா? என்று சொல்லிக் கொண்டு இருக்காதே! மங்கலமாக ஏற்றுதல் வேண்டும்!'—என்று இன்மொழிகளால் இங்கிதமாகக் கூறுவதைக் கேண்மின்:

'அருளாளர் வருகின்ற தருணமிது; தோழீ!
ஆயிரமா யிரங்கோடி அணிவிளக்கேற் றிடுக!
தெருளாய பசுநெய்யே விடுக; மற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தா லும் செய்யும்;
இருளேது? காலைவிளக் கேற்றிடவேண் டுவதோ?
என்னாதே! மங்கலமாய் ஏற்றுதலாங் கண்டாய்!
மருளேலங் கவர்மேனி விளக்கமதெண் கடந்த
மதிகதிர்செங் கனல்விரவி என்னிலும் சாலவே!'

ஆலயத்தில் விளக்கேற்றினால் மன ஆலயமும் மெய்ஞ்ஞானத்தால் ஒளிர்வதாமே! ஆம்! அன்றோர் நாள்...! திருக்கயிலாயத்தில் உமையாளொடும் எம்பெருமான் வீற்றிருந்தருளிய போது, ஆங்குள்ள நெய்த் தீபங்களுள் ஒன்று அணையும் தருவாயில் இருக்கிறது. அதிலிருந்த நெய்யை உண்ண வந்த ஓர் எலி, எதிர்பாராத நிலையில் தீபத்தைத் தூண்டி விட்டு பரமனின் பேரருளுக்குப் பாத்திரமாகி, மகாபலி சக்கரவர்த்தியாய் மண்ணுலகில் பிறக்கிறது. மண்ணகத்தும் சிவாலயங்களில் நெய்த்தீபமேற்றி கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் பெரும் பேறு எய்தியதன் வரலாற்றை உய்த்துணர்ந்திடுவோம்! இக்கோயிலின் சிவகங்கைத் தீர்த்தத்தில் மூழ்கிப் பின், பிரமதீர்த்தத்தில் மூழ்கிய புண்ணியமும் பிரம ஞானமும் பெற்றிட, 'உடலே குன்று; உள்ளமே கொப்பரை, நேயமே வர்த்தி, இடையறு தியானமே நெய்; பிராணனே கற்பூரம்; ஞானமே அக்கினி'; இவைகளைப் பொருத்தி அஞ்ஞான இருள் அற்று விழ ஜோதி சொரூப மகாதீப தரிசனம் கண்டு எல்லாப் பேறுகளும் பெற்றுய்வோமாக!

❋

# இலக்கியச் சிறப்பியல்

நம் நாட்டில் பன்னெடுங் காலமாகக் கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியோடு கூடிய கார்த்திகை நாளில் மலைமீது விளக்கு ஏற்றி வழிபடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. அதனைச் சீவக சிந்தாமணி, 'குன்றத்து உச்சிச் சுடர்'—என்று குறிக்கிறது. பொதுவாக, கார்த்திகை நட்சத்திரத்திற்கு அதி தேவதை அக்கினி. அதனையே, 'எரி' என்று பரிபாடல் (பாட்டு 11) செய்யுளும், 'அழல்' என்று புறநானூற்றுச் (பாட்டு 229) செய்யுளும் வழங்குகிறது. இதனால் தனிச்சிறப்புடையதாக கார்த்திகை நட்சத்திரத்தை நந்தமிழர் போற்றி வழிபட்டு வந்தமை போதரும்.

## மதுரை கண்ணங் கூத்தனார்

ஒரு காலத்தில் கார்த்திகையை முதன்மையாகக் கொண்டே நட்சத்திரங்கள் கணக்கிடப்பட்டு வந்திருக்கின்றன. இதனை மெய்ப்பிக்கும் வகையில்,

'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை'

—என்று கார்நாற்பது கழறுகிறது. இக்கார்த்திகையின் முக்கியத்துவத்தை நனிவிளக்க, 'நலமிகு கார்த்திகை' என்றும், அது முதன்மை நலம் சான்றமைப் பற்றி, 'தலைநாள்' என்றும், அச்செய்யுள் ஆசிரியர் மதுரை கண்ணங் கூத்தனார் விதந்து கூறுகிறார். எனினும், வராக மிகிரர் (கி. பி. 6ம் நூற்றாண்டு) என்னும் வான நூல் வல்லார் காலத்திற்குப் பின்னரே, அசுவினியை முதலாகக்கொண்டு நட்சத்திரங்களைக் கணக்கிடும் முறை வழக்கிற்கு வந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

### திருஞான சம்பந்தர் பெருமான்

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலை வந்தடைந்த போது, உயிர் நீத்த தமது அருமை மகள் பூம்பாவையின் எலும்புகள் அடங்கிய ஒரு குடத்தை அவரிடம் ஒப்படைக்கிறார், சிவநேசர் என்னும் சிவபக்தர் ஒருவர். ஆளுடைய பிள்ளையார் திருவாயினின்று வந்த அமுதத் திருப்பதிகம், அவ்வெலும்புகளை எல்லோரும் காணும் வண்ணம் தெய்வ எழில்மிகு பாவையாக்குகிறது. அத்தகு ஆற்றல் வாய்ந்த திருப்பதிகத்துள், ஒரு பாடல்:

'வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த் திகைநாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்!'

—என்று திருஞான சம்பந்தர், கார்த்திகை விழாவின் மேன்மையோடு அது பெண்களுக்கே உரிய பெற்றிமையையும் தொன்மையையும் எடுத்துக் காட்டிட, 'தொல் கார்த்திகை நாள்' என்றும், 'தையலார் கொண்டாடும் விளக்கீடு' என்றும் குறிப்பிட்டமை உய்த்துணரற் பாலதன்றோ!

### சங்க கால ஔவையார்

சங்க காலத்தில் வாழ்ந்து சங்கத்தமிழ் வளர்த்த ஔவையார் பாலை நிலக்காட்டு வருணனையில் இவ்விழாவின் பெருமையை மேலும் விளக்குகிறார். அது வருமாறு:

வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
இலையில் மலர்ந்த முகையில் இலவம்



கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்'

—அகநானூறு: 11.

உரை: மிகுந்த வெப்பமுள்ள பாலைநிலக் காட்டில் சிவப்பு நிறமுள்ள இலவம் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. இக்காட்சியானது, ஆரவாரம் மிகுந்த பெண்கள் கூட்டம் மகிழ்ந்து ஏற்றிவைத்த விளக்குகளின் வரிசைகளை ஒத்திருக்கிறது.

### நக்கீரர் பெருமான்

கார்த்திகைத் திங்களில் பௌர்ணமியோடு கூடிய கார்த்திகையே இவ்விழா கொண்டாடற்கு உரியது என்னும் தொல்மரபுண்மையை நக்கீரர் பெருமான் தெரிவிக்கிறார். தெய்விகம் மணக்கத் திருமுருகாற்றுப் படையினைப் பாடிய பெரும்பாவலர் அல்லவா அவர்!

'மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலைதூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம!'

—அகநானூறு. 141.

### பாவாணர் பெருங்கடுங்கோ

சேரமான் மரபில் பிறந்து பாலை பாடுவதில் வல்லாராய்த் திகழ்ந்து விளங்கியவர் பெருங்கடுங்கோ என்னும் பாவாணர் ஆவார். இவர் இவ்விழாவைப் பெருவிழா

என்றும், அருவி முழங்கும் அண்ணாமலைக்கே அது சிறப்புடையது என்றும் கூறி,

'அருவியான்ற உயர்சிகை மருங்கில்
பெருவிழா விளக்கம்போலப் பலவுடன்
இலையில் மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே!'

—என்னும் அகநானூறு 185வது செய்யுளிற் போற்றுகிறார். மேலும் இவர் கார்த்திகைத் திங்களின் சிறப்பு பொங்கிடப் பாராட்டுவதைப் பாருங்கள்:

'கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே!'

—நற்றிணை. 202.

### மூன்றுரை அரையனார்

நீண்ட நெடுங்காலமாக நாட்டு மக்களால் ஏற்புடையதாகக் கொள்ளப்பட்டு, அவர்களிடையே 'குன்றின் மேலிட்ட விளக்கு—' என்னும் பழமொழியாக இவ்விழா இலங்கி வருகிறது. இதனைப் பழமொழி நானூறு என்னும் நூலுள், தெள்ளிதின் காட்டப்படுவதைக் காணலாம்.

'கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள் செயினும்
என்றும் சிறியார்கண் என்னானும் தோன்றாதாம்;
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு'

### பொய்கையார்

கோச்செங்கட் சோழன் என்பான் கழுமலம் என்னும் இடத்தின்கண் கணைக்கால் இரும்பொறை என்னும்



சேரனோடு போர் நிகழ்த்தினான். போர்க்களத்தில் சிதறிச் சிந்திய இரத்தத்துளிகளின் காட்சியானது, கார்த்திகை விழாவில் ஏற்றி வைத்த அளவிலா ஒளிவிளக்குகளை ஒத்திருந்தது-என்பதைப் புலப்படுத்தும் பான்மையை களவழி நாற்பதில் பொய்கையார் மொழிகிறார். அது வருமாறு:

'ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள் எதிர்த்தோடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்
ஆர்த்து அமர்அட்ட களத்து'

### திருத்தக்க தேவர்

சீவக சிந்தாமணி என்னும் சமண காப்பிய நூலுள், இவ்விழாவின் சிறப்பு நனிபேசப் பெறுகிறது. அதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் இயற்றிய பாடல்:

'தார்ப்பொலி தரும தத்தன்
    தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கீட் டன்ன
    கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்தவன் அகலம் எல்லாம்
    பொன்னென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய்
    மதனன்மற் றிதனைச் சொன்னான்'

உரை: ஒருவன் தனது மலைபோன்ற மார்பில் செங்குவளை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்திருக்கிறான். இக்காட்சியே, கார்த்திகையின்போது குன்றின்மீது ஏற்றி வைத்திட்ட விளக்கீட்டை ஒத்திருந்தது என்பதாம்.

## முத்தொள்ளாயிரத்தார்

மலையில் தீயேற்றி விழா எடுக்கும் வழக்கம் நெடுநாள் தொட்டே இருந்து வருகிறது. இதுவே திருவண்ணாமலை கார்த்திகை விழா ஆகும். இதனை அழகுற எடுத்துக் காட்டுகிறார் முத்தொள்ளாயிரம் என்னும் நூலின் ஆசிரியர். அப்பாடல் வருமாறு:

'குடத்து விளக்கேபோல் கொம்பனார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்
ஆபுகும் மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கௌவை தரும்"

## தொல்காப்பியனார்

மிகப்பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்துள் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார், 'வேலி நோக்கிய விளக்கு நிலையும்' (தொல். பொருள். புறத்திணை இயல். 35)—என்று குறிப்பிடுகிறார். அதற்கு மெச்சு புகழ் நச்சினார்க்கினியர், 'கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு'—என்று உரை வகுத்திருப்பதைக் காணலாம்.

இத்தகு புராதனமும் புனிதமும் நிறைந்த இக்கார்த்திகை தீபப் பெருவிழாவின் உன்னதமான அடிப்படையை விளக்கும் வேத இருக்குகள் :

'ப்ரம்மாவை ஹம்ஸோ பூத்வா ; சிரோன் வேஷ்டவ்ய : ஸகஸ்ரம் ஸமா ஆஸன் ப்ரஹ்மா அஹம் சிரோஜாநே, த்வமேவ மாதாஸி த்வமேய பிதாஸி த்வமேவம்ரு தாஸி, த்வமேவ த்ருஷ்டாஸி, சுரோத்ராஸி, கர்த்தாசி, காரயதாசி, ஜ்யேஸ்டோஸி, யயேவம் வேதா, சிவசாயுஜ்ய மாப்நோதி, சிவ சாயுஜ்ய மாப்நோதி.



பொருள் : பிரமன் அன்னவடிவமாகி, சிவபெருமானுடைய திருமுடியைத் தேடுகையில் ஆண்டுகள் ஆயிரம் ஆயின. அத்தருணம் பிரமன், 'யான் உம்முடைய திருமுடியை அடைந்தேன் அல்லேன்; தாயும் நீரே ! தந்தையும் நீரே ! உடன் பிறந்தோரும் நீரே ! பார்க்கிறவரும் கேட்கிறவரும், கருத்தாவாக இருப்பவரும், காரியங்களைச் சித்திப்பவரும் நீரே; மூத்தவரும் நீரே ! உயர்ந்தவரும் நீரே !'—என்று துதித்தான். இப்படி துதிப்பவனே சிவ சாயுச்சியத்தை அடைகிறான் ; சிவசாயுச்சியத்தை அடைகிறான்.

### விஷ்ணு தேடியதைக் கூறும் வேத இருக்குகள் :

'விஷ்ணுர்வை வாராஹம் ரூபமாஸ்தாய பூமின்விதாரயன் சகஸ்ரம் ஸமா ஆசன், பாதாந் விஷ்ண பரோபூத்வா த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவப்ரு தாஸி, த்வமேவ ஜ்யேஸ்டோஸி, த்வமேவ சிரேஷ்டோஸி, யயேவம் மஹிமாநம், வேதாத்ருஷ்டாபவதி, விக்ஞாதாபவதி, கர்த்தா பவதி, காரயதாபவதி, யயேவம் வேதா சிவசாயுஜ்ய மாப்நோதி, சிவசாயுஜ்ய மாப்நோதி.

பொருள் : விஷ்ணு வராக வடிவாகி, பூமியைத் தோண்டிச் செல்கையில் ஆயிரம் ஆண்டுகள் ஆயின. அடியைக் காண விரும்பியவர், 'தாயும் நீரே ! தந்தையும் நீரே ! சகோதரரும் நீரே ! மூத்தவரும் உயர்ந்தவரும் நீரே !' என்று வணங்கினார். இம் மகிமையை அறிபவனே அடியைக் காண்கிறவன் ஆகிறான்; அடியை அறிந்தவன் ஆகிறான்; அவனே கருத்தா; அவனே அனைத்துக் காரியங்களையும் செய்பவன்; இதை அறிபவனே சிவசாயுச்சியத்தை அடைகிறான் ! சிவசாயுச்சியத்தை அடைகிறான் !

இதற்கு பாஸ்கர சம்ஹிதை,

'ப்ரஹ்மா விஷ்ணு ரஜஸா பத்த வைரௌ மதயே தயோ த்ருஸ்ய திஜாத வேதா-ஸ்தாணூ ருத்ரஸ் திஷ்டத்பு நஸ்ய கோப்தா, த்ருஷ்டவாஸ் தாணூ மூபரம்ய யுத்தம் ப்ரதஸ்ததுர் தூர மசௌதித்ருக்ஷ வராகோ விஷ்ணூர் நிமமஜ்ஜ பூமௌ ப்சஹ்மோதப் பாதபூமேர் திவமாஸுக் ருத்திர'.

—என்று பிரமாணம் வகுக்கிறது. இதன் பொருள் வருமாறு:

பிரம விஷ்ணுக்கள் இராசத குணம் மேலிட்டுப் போர் செய்கையில், அவர்களுக்கு நடுவில் ஸ்ரீ உருத்திரர் உலகங் களைக் காத்திட அக்கினித் தம்பமாய்த் தோன்றினார். அதனைக் கண்டவர்கள் போரை விடுத்து தூரத்தே விலகி னர். பின் விஷ்ணு பன்றியாகி, பூமியிலிருந்து கீழே அடி யைத் தேடிச்சென்றான். பிரமன் அன்னப்பறவையாகி முடி யைத்தேடிச் சென்றான். அம்மட்டோ? எவருடைய பாத கமலங்கள் விஷ்ணுவால் தேடப்பட்டன. வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத சிவபெருமானைத் தோத்தரித்து வணங்கிய விஷ்ணுவிற்கு அருணசலேசுவரர் அருள் புரிந் தார் என்பதை,

'யத்பாதம் போருகத்வமத்வம் ருக்யதே விஷ்ணு நாசஹ ஸ்த்துத்வாஸ் தும்யம் மகேசாந மவாங் மனசகோசரம் பத்தாரம் ருத்நோ விஷ்ணோ: ப்ரசாத மகரோத்விபு:' —என்று சரப உபநிடதம் மொழிகிறது. இவ்வகையில், 'ஆதியும் அந்த மும் இல்லாத அரும்பெரும் சோதி நம்பிறைவன்' —என்னும் உயர் தத்துவத்தை நிலைநிறுத்திடும் வகை யில், வெளிநாடுகளில் வெவ்வேறு விதங்களில் இவ்விழா கொண்டாடப் பெறுகின்றன. அமெரிக்காவில் இச்சமயத் தில், 'ஹாலோ வீன்' என்னும் திருவிழா நடப்பதாக அறிகிறோம். 'டிரூயிட்ஸ்'-என்னும் இனமக்களும் அவர் களுடைய புத்தாண்டுப் பிறப்பாகிய நவம்பர் முதல் தேதி



யில் ஒளிவிளக்குகளை ஏற்றிச் சூரிய தேவனைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள். மேலும் கார்த்திகைமாதப் பௌர் ணமியில் 'கௌமுதி மகோற்சவம்' என்னும் விழா கொண் டாடப் பட்டதாக வடமொழிக் காவியங்கள் வரைகின் றன. இவ்விழாவை நினைவுகூரின், கார்த்திகைப் பெரு விழாவுடன் நெருங்கிய தொடர்பு உடையதாக இருப்பதை அறியலாம்.

★

# பிறகோயிற் சிறப்பியல்

## ஸ்ரீ துர்க்காம்பாள் கோயில்

தேவதச்சனைக் கொண்டு இரத்தினத்தால் செய்யப்பட்டது மகிடபுரம். அதில் மகிடாசுரன் என்பவன் கொடுங்கோலோச்சி வாழ்ந்துவரும் நாளில், அவனது வேட்டைக்காக ஆயிரம் வீரர்கள் காட்டுக்குச் செல்கிறார்கள். அவர்கள், பார்வதி தவம் நோற்கும் வனத்தைச் சுற்றி சூழ்ந்துகொள்ளும்பொழுது, காவல் நின்ற அட்ட வைரவர்களால் கொல்லப்படுகிறார்கள்.

தூதுவர் மூலம் அறிந்த மகிடன், நிகும்பாசுரன் என்னும் படைத்தலைவனை அனுப்பி வைக்கிறான். எட்டு வைரவர்களும், தாக்கணங்கு, நோக்கணங்கு என்னும் இரு பெண்களும் சேர்ந்து அவனையும் அவனது படைக் கலங்களையும் அழித்தொழிக்கிறார்கள்.

இந்நிலையில் பெருஞ்சினத்துடன் மகிடாசுரன், ஆயிரம் யானைகள் பூட்டியதேரில் ஏறி, காந்தன், நீலன், முதுகரன், குருதி, அண்டன், நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், இக்கண்ணன், புகைக்கண்ணன், மாலி என்போர் புடைசூழ, பெரும்படையுடன் அம்மை இருக்கும் காட்டை நோக்கிப் புறப்பட்டு வருகிறான்.

இஃதறிந்து அஞ்சிய முனிவர்கள் 'அபயம் அபயம்' என்று அம்பிகையிடம் சரண் அடைகிறார்கள். அவரவர்கள் பயத்தைப் போக்கிட, தன் அருகில் நின்ற பெருமை மிகுந்த துர்க்கையை நோக்குகிறாள். ஆஹா! அந்த நோக்கில் தான் எத்தகு பரிவு...! அவ்வருள் நோக்கை உணர்ந்த துர்க்கையானவள்,



'ஆளிமேற் கன்னி செல்ல;
வருண நாயகிமுன் செல்ல;
காளிதுந் துபிபின் செல்ல;
சுந்தரி கணங்கள் செல்ல:
ஞாளிமேல் வடுகர் செல்ல;
தூளிமேற் செல்ல; தங்கள்
விடையின்மேல் தூசிச் சென்றார்.'

—என்ற வண்ணம் புறப்பட்டுச் செல்கிறாள், பெருமிதத்தோடு.

## மாயை வீழ்ந்தது

இரு திறத்தார் படைகளும் மோதுகின்றன. அபிராமி அருசிகனையும், வாரணி காந்தனையும். சண்முகி கரனையும், நாரணி நரகனையும், சூலக்கையாள் பிண்டனையும், வராகி சண்டனையும், நீலகண்டி மது என்பவனையும், இந்திரை நீலனையும், துந்துமிக் கொடியை யுடையவள் சோணிதவூணனையும், அருணாசலை அக்கினிக் கண்ணனையும், சுந்தரி கயிடவனையும் கொன்றபொழுது, துர்க்கையானவள் சிங்க வாகனத்தின் மீதேறி மகிடனை எதிர்க்கிறாள். சங்கநாதம் முழக்கி வில்லால் அடித்து சக்கராயுதத்தை ஏவிய அளவில் மகிடன் மாய்ந்தொழிகிறான். ஆனால் என்ன ஆச்சர்யம்! பெரிய யானை உருவில் வந்து எதிர்க்கிறானே மீண்டும்! துர்க்கையின் வேலாயுதம் அவனது யானை உடலைத் துளைத்துச் செல்கிறது. மகிடன் குதிரையாகவும், நெருப்பு உருவமாகவும், சலப்பிரளய உருவமாகவும், அந்தகாரமாகவும், பிரமனாகவும், விஷ்ணுவாகவும் மாயையினால் வடிவெடுத்துவந்து எதிர்த்தபோது, வீரத்தின் விளக்கமாய்-வெற்றியின் சின்னமாய் நின்ற துர்க்கையும் ஒரு கணம் சோர்ந்துவிடுகிறாள். அக்கணம் வானொலி கேட்கிறது. அவ்வண்ணமே, மகிடன் தன் எருமைக்கடா முகத்

துடன் வந்தபோது, தனது கூரிய கொடுவாளைக்கொண்டு தலையை வெட்டி வீழ்த்தி காலால் மிதித்துக்கொன்று, மட்டிலா மாயையை வெட்டெடன வீழ்த்தி யருள்பாலிக்கிறாள்.

இத்தகு பெருமைக்கு இலக்காய் அமைந்த புனித இடமே திருவண்ணாமலை சின்னகடை வீதியின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீ துர்க்காம்பாள் கோயில் ஆகும். எளிமையும் புராதனமும் பொருந்திய முகப்புக் கோபுரத்துடன் காட்சி தருகிறது இக்கோயில்.

உன்னதமான இவ்வம்பிகையின் பெருமையை எடுத்துக் காட்டுவது போல், உயரிய பீடத்தில்-வீரம் விம்மும் பெருமித கோலத்தில்-காம்பீர்யமும் கனிவும் நிறைந்த பார்வையோடு இவ்வம்பிகை விளக்கம் தரும் அழகைக் காணக் கண்கோடி வேண்டுமே! மற்றும் ஸ்ரீ சக்கரத்துடன் கூடிய அம்பிகை, அன்னபூரணி, பாபநாச இலிங்கநாதர் முதலிய சந்நிதிகளையும் கண்டின்புறலாம்.

உமையம்மையின் பாவம் தீர்த்திட, ஸ்ரீ துர்க்கை தன் கைவாளால் பூமியைப் பிளந்து உண்டாக்கிய 'கட்க தீர்த்தம்,' (சுனை) நவ தீர்த்தங்களில் ஒருசேர ஆடிய பலனை உடையது. பளிங்குபோல் காணப்படும் ருசியும் மணமும் உள்ள இத்தீர்த்த நீர், கொடிய பஞ்சம் வந்த காலத்தும், கோடை நீடிய காலத்தும் வற்றியதில்லையாம்.

சோழர், ஹொய்சளர் முதலிய அரசர்கள் பேணி பல திருப்பணிகள் ஆற்றி இக்கோயிலுக்கு நிவந்தங்களும் பல தானங்களும் உதவியிருப்பதை கல்வெட்டுகள் காட்டுகின்றன. தென்னிந்தியாவிலுள்ள துர்க்கை கோயில்களுள், இக்கோயில் முக்கிய சிறப்பை வகித்து விளங்குகிறது.



மற்றும் இந்நகரில் காமாட்சியம்மன் கோயில், கன்னிகா பரமேசுவரி கோயில், சிதம்பரேசுவரர் கோயில், கங்கையம்மன், சுப்பிரமணியர், கொண்டர் இரும்பர், போதராசர், வல்லப விநாயகர், சோதி விநாயகர், பூத நாராயணர் முதலிய கோயில்களும் சூழ்ந்து தெய்விகத்தை மேலும் பரப்புகின்றன.

### பவளக் குன்று

இக்குன்று ஸ்ரீ அருணாசலேசுவரர் திருப்பாதம் என்று போற்றப்பெறும். தேவேந்திரனுக்கு ஆயிரம் கண் தந்த கௌதம முனிவர், இக்குன்றின்மீது இலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்துப் பெறற்கரிய சித்திகளைப் பெற காரணமாய் நின்ற இடம்.

'அயம் சோண கிரே: பாத:ப்ரவாலா சலநாமவாந்'
(சுலோகம் 45)

'மமாச்ரம ஸமீபேஸ்மிந் புண்ய க்ஷேத்ர மிதம்மஹத்'
(சுலோகம் 47)

இதனால் இந்த சோணகிரியின் பாதமாகிற பிரவாள கிரி என்ற பெயருடையதானது, எனது ஆசிரம சமீபத்திலிருக்கும் பெரிய புண்ணியத்தலம் ஆகும் என்பதையும், கௌதமர் ஆசிரமம் முன்பு பவளக் குன்றுக்கு அருகில் இருந்து பின் மலைக்கு மேற்புறம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் ஓர்ந்துணர்க.

பவளக்குன்றில்-கௌதமர் ஆசிரமத்திற்கு அருகில்-அம்பாள் பர்ணசாலை அமைத்து தவமியற்றி வாம பாகம் பெற்று, அரனும் அம்பிகையும் கலந்திட உதவிய புனித திருத்தலம் இதுவேயாகும். பவளக் குன்றின் உச்சியில் உள்ள ஆலயத்துள் விளங்குவது அர்த்த நாரீசர் ஆவார்.

## ஸ்ரீ ஆதி அருணாசலேசுவரர் கோயில்

தேவேந்திரப் பதவியைப் பெற தவம் செய்வதறிந்த தேவேந்திரன், பிரமனைக்கொண்டு தவத்தை அழித்திடச் செய்கிறான். அதற்காக பிரமன், திலோத்தமை என்னும் ஆரணங்கை அற்புதமாகப் படைத்தவர், அவளது அழகு வெள்ளத்தில் மூழ்கி இச்சிக்கிறான். அவள் இசைவு படாது பெண்மானாகி ஓட, பிரமன் கலைமானாகித் தொடருகிறான். சோதி மலையைச் சிறிது தூரத்தில் கண்டவள் தஞ்சம் என்று அடிதொழுது வீழ்கிறாள். உடனே பரமசிவன் வேடன் உருக்கொண்டு வந்து பிரமனின் போக்கை மாற்றி, பெண்ணுக்குப் பெருமையோடு கூடிய பெருவாழ்வை அளிக்கிறார்.

காம வேகத்தால் கடையனாகிவிட்ட பிரமன் இழிநிலையை உணர்ந்து தெளிந்து, அவ்வினை அகல ஸ்ரீ அண்ணாமலைப் பெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற தலமே, ஸ்ரீ ஆதி அருணாசலேசுவரர் கோயில் ஆகும். திருவண்ணாமலையிலிருந்து சுமார் மூன்றரை மைல் தூரத்திலும், கிரிவலமாக வந்தால் ஐந்துமைல் தூரத்திலும் மலையடிவாரத்தில் அமைந்துள்ள இத்தலத்தை 'அணி அண்ணாமலை' என்றே தேவார ஆசிரியர்கள் (நாயன்மார்கள்) அழைக்கிறார்கள், எனினும் மக்கள் வழக்கில் 'அடி அண்ணாமலை' என்றே வழங்கி வருகிறது.

எளிய முகப்புக் கோபுரத்தில் சம்பந்த விநாயகர், பழனி ஆண்டவர் ஆகியவர்களை வணங்கி உட்சென்றால், சண்முகப் பெருமான், நால்வர், கஜலட்சுமி, சண்டிகேசர், அம்மன் முதலிய சந்நிதிகளைக் கண்டின்புற்று, மூலவர் ஸ்ரீ ஆதி அருணாசலேசுவரரைக் கண்ணாரக் காணலாம்.

கோயிலுக்கு மேலண்டைப் புறத்துக் கிணற்றில் சுரங்கமும், குத்து விளக்கு, சங்கு, சதானந்தர் சிலை முதலி



யனவும் கண்டு எடுத்ததாகக் கூறுவர். பாண்டியர்தம் இலட்சினை புறமதிள்களில் காணப்படுகின்றன.

## உழ மண்ணுப் பிள்ளையார்

சிறு கிராம அமைப்போடு கூடிய இத்தலத்தில், சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் அருணைமலையிலிருந்து ஒரு கல் உருண்டு உருண்டு வந்து அடிவாரத்தை அடைந்தது. அவ்விடமே இன்றும், 'செம்மண்ணு மேடு' என்று அழைக்கப்படுகிறது. பிறகு செம்மண்ணு மேட்டிலிருந்து புரட்டி வந்து பார்த்தபோது, 'உழ மண்ணுப் பிள்ளையார்' என்னும் நாமத்தோடு ஒளிர்வதைப் பெரியோர் கண்ணுற்றனர். மகிமை மிக்க சாம்பிராணி சுவாமி மகிழமரம் நாட்டி வளர்த்து வந்தார்.

மகிழ மரத்தடியில் விளக்கம் தரும் உழமண்ணுப் பிள்ளையார், நாட்டுக்கோட்டை செட்டியார்கள் திருப்பணிகளைப்பெற்று, பக்தர்களுடைய வேண்டுதல்களை ஈடேற்றி வருவதாக நம்பிக்கை.

## மாணிக்க வாசகர் ஆலயம்

ஆதி அருணாசலேசுவரர் கோயிலுக்கு சுமார் அரை பர்லாங்கு தூரத்தில் மாணிக்கவாசகர் கோயில் அமைந்திருக்கிறது. அருகில் மாணிக்கவாசகர் தீர்த்தம். இங்குதான் மாணிக்கவாசகர் தங்கியிருந்து, நாடோறும் பிரம தீர்த்தத்திலிருந்து தாமே நீர்கொண்டுவந்து ஆதி அருணாசலேசுவரருக்குப் பூசனைப் புரிந்து வந்ததாகவும், இங்கிருந்தே திருவெம்பாவை, திருவம்மானை முதலிய தேன் மணக்கும் பாடல்களை இயற்றியதாகவும். அதிகாலையில் இம்மாணிக்கவாசகர் தீர்த்தத்தில் இளம்பெண்டிர் மூழ்கியும் கையால் குடைந்தும் ஆடிய புனலாட்டத்தையே திரு

வெம்பாவையில் குறிப்பிடுவதாகவும், இக்காரணம் கொண்டே இத்தீர்த்தம் மாணிக்கவாசகர் தீர்த்தம் என்று வழங்கப்படுவதாகவும் பெரியோர் பணிப்பர்.

நினைவுச் சின்னமாகவுள்ள மாணிக்கவாசகர் சந்நிதிக்கு அரசு மான்யம் இருந்ததாகவும், கோசாலை, ஆடையூர் முதலிய கிராமங்களில் நஞ்சை புஞ்சை நிலங்கள் இருந்ததாகவும் கூறுகின்றனர்.

மாணிக்கவாசகரின் மணிவாசகத்தில் மெய்ப்புளகித்து உருகிடும் அனைவரும் இவரைச் சாலத் தொழுது திருப்பணியாற்றுவது கடமையாகும்.

அருகில் ரேணுகையம்மன், காளியம்மன், கண்ணப்பர், மொட்டை மண்டபம் முதலிய அமைந்துள்ளன; அவையும் காணத்தக்கவையே ஆகும்.

**சாத்தனூர் அணை :**

திருவண்ணாமலைக்குத் தென்மேற்கில் தென்பெண்ணை ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள இவ்வணை, 32 கி. மீ. தூரத்தில் உள்ளது. வறண்டுவிட்ட நன்செய் நிலங்களுக்கும் புன்செய் நிலங்களுக்கும் உதவிடும் வகையில் அணை கட்டிட தீர்மானித்துச் செயல்பட்டனர். இரண்டு கோடியே எண்பத்தொன்பது லட்சம் ரூபாய் செலவில் 460 கோடி கன அடி கொள் அளவுள்ள தேக்கம் 1954ல் தொடங்கி, 1957ல் கட்டி முடித்தனர். சாத்தனூர் அணையில் கல்லணையின் நீளம் 420 மீடர். மண் அணையின் நீளம் 370 மீடர். நீர் தேக்கத்தின் கொள் அளவு 810 கோடி கன அடி.



இதன் மூலம் செங்கம், திருவண்ணாமலை, திருக்கோயிலூர் வட்டங்களில் இருபதாயிரம் ஏக்கர் பயனடைந்து வருகிறது.

**சாத்தனூர் பூங்கா :**

அணைக்கட்டையொட்டி கலையார்வம் சொட்டும் வண்ண உருவங்களுடன் பூங்கா அமைந்து விளங்குகிறது. மாதிரி அணை, தொங்கு பாலம், மீன் காட்சிகள், மயில், முயல் காட்சிகள், பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் காட்சியளிக்கும் புல்வெளிகள், எழிலூட்டும் வண்ண மலர்கள் முதலியன கண்ணைப் பறிப்பன. அகத்தியர், சிவபெருமான், தொழிலாளர்கள், பெண்டிர், கன்றுடன் பசு முதலிய சிலைகள் காணத்தக்கவையே யாகும்.

சனி ஞாயிறு மற்றும் விசேட நாட்களிலும் வண்ண மின் விளக்குகள் ஒளிவிடும். சுமார் ஏழு ஏகர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்கா, சினிமா தயாரிப்பாளர்களால் மிகவும் விரும்பப்படுகிறது. அடிக்கடி இங்கு வெளிப்புறக் காட்சிகள் படமாக்குவதில் இருந்து நன்கறியலாம். இங்கு தங்குவதற்கு வசதியான வாடகை விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

**ஏ. கே. படவேடு :**

திருவண்ணாமலை—வேலூர் சாலையில் சந்த வாசல் என்னும் இடத்தில் இறங்கி, ஐந்து மைல் தூரம் செல்ல வேண்டும். பவளகிரியின் சூழலும், இயற்கையின் இனிய எழிலும், ஆரவாரமற்ற மக்களின் எளிய வாழ்வும் அற்புதமானவை குண்டலிபுரி, பட்டிசீகரம், மாதுபுரி என்று போற்றப்பெறும் இப்பதி. ஜமதக்கினி முனிவர் ஆசிரமம் அமைத்து,

ரேணுகையுடன் வாழ்ந்த வீரவரலாறு உலகம் அறிந்த தாகும். சிற்றரசர், பல்லவர் முதலானோர் ஆண்டிருக்கின் றனர். ஸ்ரீ ரேணுகாம்பிகை கோயில், ஸ்ரீ ராமச்சந்திரர் கோயில், தரைமட்டமாகிய பாழடைந்த கோட்டைச் சுவர் யாவும் ஆராய்ச்சிக்குரியன.

## வேலூர் கோட்டை

தேசிய வரலாற்றுப் பின்னணியை நிலைகளாகக் கொண்ட இக்கோட்டை, அகழி சூழ்ந்த கருங்கற்களால் சதுர வடிவில் கட்டப்பட்டு விளங்குகிறது. பொம்மி ரெட்டி, திம்மி ரெட்டி என்பவர்கள் கட்டியதாகக் கூறுவர்.

இதன் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஜலகண்டேசுவரர் கோவில், வெறுங் கோயிலாகவே உள்ளது. இதிலுள்ள சிற்ப நுட்பங்களும், கல்யாண மண்டபமும், பிற அமைப்பு களும் கூர்ந்து நோக்கின், ஒரு காலத்தில் நல்ல நிலையில் நிருவாகம் நடந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

இப்போது இக்கோட்டை, போலீஸ், சிறை, அரசு அலு வலகம் முதலிய இயங்க உதவியாக இருக்கிறது.

## விரிஞ்சிபுரம் :

விரிஞ்சிபுரம் கோயில்—மதில் அழகு சிறப்புடையது. விஜயநகர அரசர் காலத்திலேயே வரதட்சணையைத் தடுத் திட சட்டம் வந்ததாக கல்வெட்டு சான்று கிடைக்கிறது. கார்த்திகைக் கடை ஞாயிறன்று இங்குள்ள சிம்மகுளத்தில் பெண்டிர் குளித்து, அவர்களுடைய மனக்கவலையைப் போக் கிக் கொள்கின்றனர். சுவாமி ஸ்ரீவழித்துணை நாதர் (மார்க்க பந்தீசுவரர்) அம்பாள் ஸ்ரீ மரகதாம்பாள் தலவிருட்சம் : பனை.

★

# நினைவுக் குறிப்புகள்

**திருவண்ணாமலை :** நினைக்க முத்தித் தலம்; மணிபூரகத் தலம்; அக்கினித்தலம்.

**வேறு திருப்பெயர்கள் :** அருணாசலம், அருணகிரி, அருணை, வாயுநகரம், தேசுநகரம், சோணகிரி, சிவலோகபுரி, முத்திபுரி, ஞான நகரம், தலேச்சுரம், கௌரி நகரம், சுத்த நகரம், தக்கிண கைலாயம், அனற்கிரி.

**மலையின் நிலைமை :** கிருதயுகத்தில் அக்கினி மலை, திரேதாயுகத்தில் மாணிக்கமலை; துவாபர யுகத்தில் பொன் மலை; கலியுகத்தில் கல்மலை.

**சோதிப்பிழம்பான காலம்:** மாசித்திங்கள், கிருஷ்ணபட்சம், சதுர்த்தசி திதி, மகநட்சத்திரம், அர்த்த ராத்திரிக்குமேல்.

**மலைவடிவான காலம் :** கார்த்திகைத் திங்கள், கார்த்திகை நட்சத்திரம், சோமவாரம், இரவு பதினேழு நாழிகைக்கு மேல்.

**அட்டமலைகள் :** கிழக்கில் அர்க்கமலை; தெற்கில் தெய்வ மலை; மேற்கில் தண்டமலை, வடக்கில் சூலமலை; தென் கிழக் கில் அக்கினிமலை; தென்மேற்கில் நிருதிமலை; வடமேற்கில் தாரகாசலம்; வடகிழக்கில் சிவமலை.

**சுவாமி பெயர்கள் :** அருணகிரிநாதர், பராசத்தியம்மை, அடி அருணகிரிநாதர், உண்ணாமுலையம்மை. (இளங்குமரனை முருகனுக்குப் பால் கொடாமல் திருக்கயிலையிலிருந்து இங்கு வந்து தவமியற்றி அர்த்தபாகம் பெற்றமையால் இப்பெயர் வந்தது.) தேவராயர், வசந்தராசர், சபாநாயகர், திருவண்ணா மலை நாதர், புழுகணி நாதர், யானைதிறை கொண்ட விநாயகர், செல்வ விநாயகர், சிவசுப்பிரமணியர், அதிகாரத் திருநந்தி தேவர், மூன்றும் பிரகாரத் திருநந்திதேவர், துர்க்காதேவி, மகா காளர், இடபதேவர், சண்டேசுர நாயனார், சனற்குமாரர், கௌதமர், நால்வர்.

**நாடியாகிய நதிகள் :** இடைகலை — பெண்ணையாறு; பிங்கலை—சேயாறு; சுழுமுனை—கமலையாறு.

**உற்பவ நதிகள் :** கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, சிந்து நருமதை, சீதேவி, சோணைநதி.

**தீர்த்தங்கள் :** கிழக்கில் இந்திரதீர்த்தம்; வடகிழக்கில் கௌதம தீர்த்தம்: தென்கிழக்கில் அக்கினி தீர்த்தம்: ஆலயத்துள் சிவகங்கை; தெற்கில் யமதீர்த்தம்; தென்மேற்கில் நிருதி தீர்த்தம்; மேற்கில் வருணதீர்த்தம்; வடமேற்கில் வாயு தீர்த்தம்; (புண்ணிய நதி) வடக்கில் குபேர தீர்த்தம்; (சேயறு); சிவகங்கைக்கு கீழ்சக்கர தீர்த்தம்; பிரம தீர்த்தம்; கடக தீர்த்தம்; அசுவினி தீர்த்தம்; அகத்திய தீர்த்தம்; வசிட்ட தீர்த்தம்; விஷ்ணு தீர்த்தம் முதலியன.

**விசேட தினங்கள் :** விடியற்காலை, ஐப்பசிமாதக் கேட்டை, கார்த்திகைக் கார்த்திகை, கார்த்திகை உத்திராடம், மாசி சிவராத்திரி, சித்திரை அபரபக்க சதுர்த்தசி, அத்தோதயம், மகோதயம், கிரகண காலம், மார்கழிமாதம்.

**வழிபட்டோர் :** உமையம்மையார், மார்க்கண்டேயர், விஷ்ணு, பிரமன், கௌதமர், திக்குபாலகர், வச்சிராங்கத பாண்டியன், வல்லாளன், சனகர், அட்டவசுக்கள், சப்த மாதாக்கள், ஆதித்தன், பிரதத்தன், குதிரை, புளகாதிபன், இந்திரன், அருணகிரிநாத சுவாமிகள் மற்றும்பலர்.

**புகழ்பாடும் நூல்கள் :** இருக்கு வேதம், அதர்வண வேதம், பாஸ்கர சம்ஹிதை, சரப உபநிடதம், தேவாரம், திருவாசகம், கந்தப்புராணம், உபதேச காண்டம், உருத்திர சம்ஹிதை, சூதசங்கிதை, அருணகிரிப் புராணம், அருணாசலப் புராணம், திருவருணைக் கலம்பகம், சோணசைல மாலை, அருணகிரி அந்தாதி, பட்டினத்தார் பாடல் முதலியன.



அண்ணாமலைப் பெருமான் ஆலயத் தோற்றம்.



அருணகிரி கிளி கோபுரம்.





ஸ்ரீ அருணகிரிநாதர்



ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்

'ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்-வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டி னான்!'

—தாயுமானவர்.

திருவண்ணாமலை பெருமிதத் தோற்றம்.

# உய்ந்தேன் நானே!

கங்கையைத் தலைமேல் வைத்து
காணரும் சோதி மிக்க
மங்கையைப் பாகம் வைத்து
மால்விடை மீத மர்ந்து
சங்கநூற் செறிவே போல,
சாத்திரக் கொத்தே என்ன
மங்கலப் பொருளாய் நின்ற
மாண்புடை மலையைக் கண்டேன்!

அண்டமா யகண்டம் ஆகி
அணுவினுக் கணுவ தாகி
புண்டரீ கத்தோன் மாயோன்
போற்றரும் சோதி யாகி
'விண்ணவர் வேந்தே! எங்கும்
விழுமிய பொருளே!'—என்ன
எண்ணிலா தவரும் ஏத்தும்
எழில்மலை வேண்டி நின்றேன்!

மாலுமே ஏனம் ஆகி
மலர்அடி தொழுதும் நின்று,
மோனமே மறையோன் வந்து
மொய்ம்மலர் தூவி யார்த்து,
'சோதியே! சுடரே!'—என்ன,
பிழம்பெனப் பொலிந்தான் மன்னே!
காமலர் சொரியப் போற்றும்
கவின்மலை தன்னில் உய்ந்தேன்!

—ஆசிரியர் ஆக்க

'சத்தபுரி யேமுத லெடுத்தலம் யாவுமொரு
தட்டுமொரு தட்டதனிலே
அத்தலமு மிட்டெதிர் நிறுக்கவவை கட்கதிக
மானதொளி ரந்த நகரம்;
முத்திநக ரென்றுபெயர்; ஞானநக ரென்றுபெயர்;
முந்தியத லேச்சர மெனும்
சுத்தநக ரென்றுபெயர்; தென்கயிலை என்றுபெயர்;
சோணகிரி என்றுபெயரே!'

'வாதமிகு காலவழ லூழியிலே யேழுபுயல்
வாதைபுரி யாதநகரம்;
சீதமுத லானபிணி தீமையிடை யூறுபசி
சேரவரி தானநகரம்;
மாதவர்கண மாதவர்கள் பூசைபுரி மாநகர
மாதவர்கள் நாபி மலராம்;
போதிலுறை வேதியர்தொ ளூறுபெய
ரோடறுவர் பூசைபுரி தேவநகரம்!

—ஸ்ரீ அருணாசலப் புராணம்.

மங்கல வாழ்த்து.

'வாழ்க அந்தணர்; வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே!'

—திருஞானசம்பந்தர்.

112842